# மாத்வமித்திரன்

7 - [illegible] 1932

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 4 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் ஜ்யேஷ்ட மாஸம் | No 11 |
|---|---|---|
| புஸ்தகம் 4 | பௌர்ணமி (23—6—32.) | நெ 11 |

| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | மத்வமதத்தின் இரகசியங்கள். | 321 |
| 2. | ஆசாரமாலை. | 323 |
| 3, | மணிமஞ்ஜரி. (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.) | 325 |
| 4. | ஸ்ரீமத்வமத கிரந்தங்கள், | 329 |
| 5. | காடகோபநிஷத். | 331 |
| 6. | ஹரிபஜனை இரவில் அதிகநேரம் தகாது. | 335 |
| 7. | கடிதங்கள், | 337 |
| 8. | ஸ்ரீதாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்.) | 339 |
| | [illegible] ஷனங்கள். | 347 |
| | [illegible]டு. | 347 |
| | [illegible]ம. வே. காபேஹயக்ரீவ தீக்ஷிதர் | 350 |

ஆசிரியர்
[illegible]வத ரங்கநாதாசாரியார்.

72
[illegible]
N32 . 4 . 11
208 (74

**SRI RAGHU VILAS, MADURA.**

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

*R. Bindumathava Rao,*
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை.

[illegible] மானேஜர்

**ஏஜண்டுகள் தேவை.**

மானேஜர் மாத்வமித்திரன்
ஸ்ரீவியாஸ விலாசம், கும்பகோணம்.

**A Book of Easy English Verse**
By
**V. Ramachandra Rao,** B.A., B.L.,

*Certain selections from the Ramayana etc.,*
*A Book for you to enjoy a happy half hour.*

Price 4 As. POST FREE.

Apply to:—
***THE MANAGER,***
**THE MADWAMITRAN,**
Sri Vyasa Vilas,
Kumbakonam.

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## மத்வமதத்தின் இரகசியங்கள்.

(முன் தொடர்ச்சி.)

தாமோதரனுடையவள் இந்திரா, ஸங்கர்ஷணனுடையவள் ஹயுணீ, வாஸுதேவனுடையவள் ஹிரண்யா, ப்ரத்யும்னனுடையவள் ஸத்யா, அனிருத்தனுடையவள் நித்யா, புருஷோத்தமனுடையவள் ஆனந்தா, அதோக்ஷஜனின் பாரியை ப்ரக்ஞா, நரஸிம்ஹனின் பாரியை மகாலட்சுமி, அச்சுதனுடைய பத்னி ஸுந்தரி, ஜனார்த்தனனுடையவள் ஸுசீலா, உபேந்திரனுடையவள் வித்யா, ஹரியின் பத்னி ஸுகந்தா, ஸ்ரீகிருஷ்ணனின் பத்னி ஸுலக்ஷணை, இப்படி பல அவதாரங்களாகும். 3 மகாலட்சுமியை விட கோடி குணம் குறைந்தவர் பிரம்மா. அவருக்கு ஸமமானவர் வாயுபகவான். 4 இவர்களுக்கு நூறு குணம் குறைந்தவர்கள் பிரம்மாணி பாரதி இவர்கள். 5 இவர்களுக்கு நூறு குணம் குறைந்தவன் கருடன். இவனுக்கு அவதாரமில்லை. இவன் 28 லக்ஷணங்களுள்ளவன். கருடனுக்கு ஸமமானவர்கள் சேஷன், ருத்திரன். 6. இவர்களுக்கு ஐந்து குணம் குறைந்தவள், ஸ்ரீகிருஷ்ணனுடைய பட்டமகிஷிகளான ருக்மணி ஸத்யபாமா இவர்களைத் தவிர்த்துள்ள ஆறு பட்டமகிஷிகளில் முக்கியமானவள் ஜாம்பவதி. இவள் 27 சரீர லக்ஷணங்களுள்ளவள். இவளுக்கு ஸமமானவர்கள் இதர மகிஷிகளான நீலா, பத்ரா, மித்ரவிந்தா, காளிந்தி லக்ஷணை இவர்கள். 7 ஜாம்பவதிக்கு 2 குணம் குறைந்தவள் ...

னுடைய பத்னியான ஸௌபர்ணி. இவளுக்கு 26 லக்ஷணங்கள் தானுண்டு. அப்படியே சேஷனுடைய பத்னியான வாருணியும் ருத்திரனுடைய பத்னியான பார்வதியும் இவளுக்கு ஸமமானவர்கள். 8 இவர்களுக்கு 10 குணம் குறைந்தவன் இந்திரன். சரீர லக்ஷணம் 5 தான். இவனுக்கு சமமானவன் மன்மதன். 9 இந்திரனை விட பத்து குணம் குறைந்தவன் அகங்காரிகப்ராணன். இவன் த்வக்குக்கு அபிமானி. இவன் கஜனென்ற கபியாய் பிறந்தவன். இவனுக்கு சரீரலக்ஷணம் 24. 10 இவனுக்கு பத்துகுணம்குறைந்தவன் பிரஹஸ்பதி. சப்ததத்வத்திற்கு அபிமானி. 23 லக்ஷணங்களுள்ளவன். இவனுக்கு ஸமமானவர்கள், இந்திர பத்னியான சசீ, மன்மதனுடைய பத்னியான ரதி, மன்மதனுடைய புத்திரனான அநிருத்தன், பாணிதத்வத்திற்கு அபிமானியாய் சதுர்முகனுடைய குமாரனான தக்ஷன், உபஸ்தத்திற்கு அபிமானியாய் தசரதராஜனாய்ப்பிறந்த ஸ்வாயம்புமனு இவர்கள். 11 இவர்களுக்கு 5 குணம் குறைந்தவன் ப்ரவஹவாயு. வாயுதத்வத்திற்கு அபிமானி. 22 லக்ஷணங்களுள்ளவன். நிர்ருதி திக்குக்கு அபிமானி. கோணவாயு என்றும் நாவலிக்யவாயு என்றும் சொல்லப்படுவதுண்டு. 12 இவனுக்கு 2 குணம் குறைந்தவன் சூரியன். சக்ஷுஸ்ஸுக்கு அபிமானி. 21 லக்ஷணங்களுள்ளவன். இவனுக்கு ஸமமானவர்கள் சந்திரன், யமன், ஸ்வாயம்புமனுவின் பத்னியான சதரூபாதேவி. 13 இவர்களுக்கு காலே அரைக்கால்குணம்குறைந்தவன் வருணன். 20 லக்ஷணங்களுள்ளவன். ஜிஹ்வைக்கு அபிமானி. 14 வருணனைவிட அரைக்கால் குணம் குறைந்தவன் நாரதர். பிரம்மாவின் தொடையினின்றும் பிறந்த மகரிஷி 20லக்ஷணங்களுள்ளவர். 15 அவருக்கு அரைக்கால் குணம் குறைந்தவர் அக்னி. வாக்குக்கு அபிமானி. 19 லக்ஷணங்களுள்ளவன். அவனுக்கு ஸமானமானவர்கள், பிருகு மகரிஷியும் தக்ஷப்ரஜேசுவரனுடைய பத்னியான ப்ரஸூதியும். 16 அக்னியைவிட 2 குணம் குறைந்தவர் ஏகர்ஷி என்னும் அக்னி. 17 அவரைவிட 2 குணம் குறைந்தவர் பிரஹ்லாதன். 18 பிரஹ்லாதனுக்கு கால் குணம் குறைந்தவர் வசிஷ்ட மகாமுனி. 18 லக்ஷணங்களுள்ளவர். அவருக்கு சமானமானவர்கள் மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்த்யர், புலஹர், க்ரது, விச்வாமித்ரர், வைவஸ்வதமனு. 19 இவர்களுக்கு சற்று குறைந்தவர் பாயுதத்வத்திற்கு அபிமானியான மித்திரன். 17 லக்ஷணங்களுள்ளவன். அவனுக்கு சமமானவர்கள் பிரஹஸ்பதியின் பத்னியான தாரா. கடோற்கஜனாய் பிறந்த நிர்ருதி, ப்ரவஹவாயுவின்பாரியாளான ப்ராவஹீ, இவர்கள். (தொடரும்.)



# ஆசாரமாலை.

(முன் தொடர்ச்சி.)

இது ஸுராக்கு ஸமானமாகும். காதை மூடிக்கொண்டும், தலையை மூடிக்கொண்டும் பெஞ்சு முதலிய உயர்ந்த ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டும், கால்களை அலம்பிக்கொள்ளாமலும், ஆசமனம் செய்தால் அசுசி உண்டாகும். விரல்களால் எடுத்தும், ஸீத்கார சப்தம் செய்துகொண்டும், கண்ணால் பார்க்காமலும், நின்றுகொண்டும், மூத்ரோத்ஸர்ஜனம் செய்துகொண்டும், வம்பு பேசிக்கொண்டும், துஷ்டர்களின் பாஷணங்களை சிரவணம் செய்துகொண்டும், இதராளைத்தொட்டுக்கொண்டும், பராக் பார்த்துக்கொண்டும், கெட்ட வஸ்துக்களைப் பார்த்துக்கொண்டும், படுத்துக்கொண்டும், காலில் பாதக்குறடு முதலியவைகளை தரித்துக்கொண்டும், முழங்காலுக்கு வெளியில் கையை வைத்துக்கொண்டும், தலையில் முண்டாசுக் கட்டிக்கொண்டும், உடம்பில் சட்டை போட்டுக்கொண்டும், ஒரே கையால் ஜலமெடுத்தும், தலையை அவிழ்த்துக்கொண்டும், ஆசமனம் செய்யலாகாது. முழங்கால் மட்டில் ஜலத்தில் நின்றும், தரையில் கிழக்கு முகமாய் உட்கார்ந்தும், தர்ப்பணம், ஆசமனம், ஜபம் இவைகளை விதியின்படி செய்யலாம். ஒரு காலை ஜலத்திலேயும், ஒரு காலை வெளியே தரையிலும் வைத்து ஈர வஸ்திரத்துடனோ அல்லது உலர்ந்த வஸ்திரத்துடனோ பிராம்மணன் ஆசமனம் செய்யவேண்டுமென்றும், ஈரவஸ்திரத்துடன் ஜலத்தில் தர்பணம், ஆசமனம், ஜபம் செய்யவேண்டுமென்றும் தரையில் உலர்ந்த வஸ்திரத்துடன் இவைகளைச் செய்யவேண்டுமென்றும் ஹாரீதர் அறிவித்திருக்கிறார். முழங்கால் மட்டிலோ அல்லது அதற்கும் மேலாகவோ ஜலத்தில் நின்று ஆசமனம் செய்யவேண்டுமென்று மற்றொரு ஸ்மிருதி கூறுகிறது.

எப்போதும் யக்ஞோபவீதத்துடனும் முடிபோட்டுக்கொண்ட சிகை (தலைமயிர்)உள்ளவனும்தான் பிராம்மணனாவான். அவைகளில்லாத பிராம்மணன் செய்யும் சிராத்தாதி எல்லாவிதி விகிதமான கர்மாக்களும்நிஷ்பலமே. கோகர்ணம்பசுவின்காதைப்போல் செய்துகொண்ட உள்ளங்கையால் ஓர் உளுந்து முழுகும் ஜலத்தைத்தான் ஆசமனம் செய்யவேண்டும். அதற்கு குறைந்தோ அல்லது அதிகமாகவோ ஜலத்தை ஆசமனம் செய்தால் ஸுராபானம் செய்ததாகும். வலதுகை எல்லா விரல்களையும் விரித்து சேர்த்து கையின் நடுவில் ஜலத்தை எடுத்து கட்டை

லையும் சுண்டு விரலையும் ஒதுக்கிவிட்டால் ஹஸ்தம் கோகர்ணம்போல் செய்ததாகும். தேவ தீர்த்தத்தால் ஜலமெடுத்து அதை கண்ணால் பார்த்துவிட்டு பிரம்ம தீர்த்தத்தால் ஆசமனம் செய்யவேண்டுமென்று ஸ்மிருதிகாரர்கள் அறிவிக்கின்றனர். கையின் நுனி தேவதீர்த்தமென்றும், கையின் மத்யம் அக்னிதீர்த்தமென்றும், கட்டைவிரலின் அடிபாகம் பிராம்மதீர்த்தமென்றும், சுண்டுவிரலின் அடிபாகம் பிராஜாபத்ய தீர்த்தமென்றும், மோதிரவிரலின் அடிபாகம் பித்ரு தீர்த்தமென்றும், பிராம்மணனின் கையை சொல்லப்பட்டிருக்கிறது. தேவர்களுக்கு தர்பணம் தேவதீர்த்தமாகிய விரல் நுனிகளால் விடவேண்டும். கட்டைவிரலின் அடிபாகத்தால் அதாவது பிரம்மதீர்த்தத்தால் ஆசமனமும், சுண்டு விரலின் அடிபாகத்தால் ரிஷிதர்பணமும், ஹோமமும், ஆள்காட்டி விரல் கட்டைவிரல் இவைகளின் அடிபாகத்தால் பித்ரு தர்பணமும் செய்யப்படவேண்டும். கையின் நுனியால் தானமும், கையின் மத்ய பாகத்தால் ப்ரதிக்ரஹமும் செய்யப்படவேண்டும். கட்டைவிரல் வாயுபகவான் என்றும் மோதிரவிரல் சூரியனென்றும் சுண்டுவிரல் வைதேவதைகளென்றும் பாம்பு விரல் ப்ரஜாபதி என்றும் சுத்தியை விரும்புகிறவர்கள் கருதவேண்டுமென்கிறது மற்றொரு ஸ்மிருதி. பிராம்மணனின் இரண்டு காதுகளைத் தொட்டுக்கொள்வதால் கங்கை யமுனை இந்த நதிகளும் சூரியசந்திரர்களும், வாயு அக்னியும் திருப்தி அடைகிறார்களாம். தோட்களை தொடுவதால் எல்லா பர்வதங்களும் திருப்தி அடைகின்றனவாம். ஆகையால் பிராம்மணன் அடியிற்கண்டபடி அவயவங்களை ஸ்பரிசம் செய்துகொள்வதாலேயே பிரம்மாமுதல் துரும்புவரையிலுள்ள எல்லா உலகத்தையும் திருப்தி செய்தது போலாகும் என்றார் வியாக்ரபாதர். ஹாரீதர் சொல்லதாவது:—பவித்ரம் தரித்து நல்லசுத்தோதகத்தை கட்டை விரலின் மூலமாகிய பிராம்மதீர்த்தத்தால் கேசவ நாராயண, மாதவ, என்று சொல்லி மூன்றுதடவை ஆசமனம் செய்து, கோவிந்தா, விஷ்ணோ என்று சொல்லி இரு உள்ளங்கைகளையும் அலம்பிக்கொண்டு மதுஸூதன த்ரிவிக்ரம என்று சொல்லி கட்டைவிரலின் அடியால் இரண்டு கன்னங்களையும் அலம்பி, வாமனா, என்று சொல்லி பாம்புவிரல் முதலிய மூன்று விரல்களால் இரண்டு உதடுகளையும், ஸ்ரீதர என்று சொல்லி எல்லா விரல்களால் நாஸிகை உதடு இவைகளின் மத்ய பாகத்தையும் அலம்பிக்கொள்ளவேண்டும். பிறகு ஹ்ருஷீகேச என்று இரு கைகளையும் பத்மநாபவென்று இரு பாதங்களையும் தாமோதர என்று சிரஸ்ஸையும் சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். (தொடரும்.)



# ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியாரியற்றிய மணிமஞ்சரி.

## நான்காவது அத்யாயம்.

(முன் தொடர்ச்சி.)

14. ஸ்ரீ கிருஷ்ணர் அவருடைய அத்தை புருஷனை பாண்டுராஜன் வனத்தில் இறந்துவிட்டதாயும் அந்த பாண்டுவின் இளையாளான மாத்ரீயும் பர்த்தாவுடன் உடன்கட்டை ஏறிவிட்டதாயும் அத்தையான குந்தியையும் அவளுடைய குமாரர்களான பாண்டவர்களையும் வனத்திலிருந்த வேதவியாஸர் முதலான மகரிஷிகள் ஹஸ்தினாவதிக்கு அழைத்துவந்து அவர்களின் பெரிய அப்பாவான திருதராஷ்டிரனிடம் ஒப்புவித்துச் சென்றனரென்றும் திருதராஷ்டிரனின் குமாரர்களான துரியோதனாதிகள் பாண்டவர்களிடம் மிகுந்த த்வேஷங்கொண்டு அவர்களின் இஷ்டப்படிக்கெல்லாம் பலவாறு ஹிம்ஸித்து வருகிறார்களென்றும் திருதராஷ்டிரனும் அவனுடைய பிள்ளைகளுக்கு ஸ்வாதீனமாயிருக்கிறானென்றும் சமாசாரம் கேட்டார். 15. உண்மையைத் தெரிந்துகொண்டு திருதராஷ்டிரனுக்கு நற்புத்தி சொல்லிவர பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அக்ரூரனை ஹஸ்தினாவதிக்கு அனுப்பினார். அக்ரூரன் அங்கு சில மாதகாலமிருந்து கௌரவர்கள் பாண்டவர்களிடம் அக்கிரமம் செய்வதையும் திருதராஷ்டிரன் அதற்கு உடன்பட்டிருப்பதையும் அறிந்து திருதராஷ்டிரனிடம் ஸ்பஷ்டமாய்ச் சொன்னான். 16 இனி உன்னுடைய குமாரர்கள் பிழைத்திருக்கப்போவதில்லை. பீமசேனனென்னும் அக்னி அவர்களை கொளுத்தி சாம்பலாக்கிவிடப்போகிறது. என்றிவ்வாறு சொல்லி பீமசேனன் அர்ஜுனன் இவர்களைக்கூட்டிக்கொண்டு அப்படியே ஸஹதேவனையும் அழைத்துக்கொண்டு மதுரைக்கு வந்து சேர்ந்தான். 17 பீமார்ஜுனர்கள் மதுரையில் ஸ்ரீ கிருஷ்ணனிடமிருந்து அவரவர்களின் யோக்யதைக்குத் தக்கவாறு தத்வ ஞானத்தை உபதேசம் பெற்று அந்த பகவத் ஞானம் பகவத் பக்தி இவைகளையே ஆனந்தமாய் அமிர்தம்போல் உட்கொண்டு ஸ்ரீ

கிருஷ்ணனை ஸர்வோத்தமமான பரபிரம்மமென்று பூஜித்துக் கொண்டு, அவரவர்களின் யோக்யதைக்குத் தக்கவாறு உத்தமகர்மாக்களை செய்துகொண்டு யாதவர்களெல்லாம் அவர்களை விசேஷமாய் பூஜித்துவர, மூன்று வருடகாலம் மதுரையிலேயே வஸித்து வந்தனர். 18. பிருந்தாவனத்தில் நந்தகோபன் முதலியோர் ஸ்ரீ கிருஷ்ணனின் வியோகதுக்கத்தால் வருந்திவரவும் அவர்களுக்கு பகவான் தான் ஸாமானிய மனுஷ்யனல்லவென்றும் எல்லோர் ஹிருதய கமலத்தில் எப்போதும் சமீபத்திலேயே இருந்து வருகிறேனென்றும் ஆதலால் தன்னுடைய வியோக துக்கத்தை அடையவேண்டாமென்றும் சமாதானம் சொல்லி அவர்களுக்கு ஆறுதலளிக்க ஸ்ரீ கிருஷ்ணர் உத்தவனை பிருந்தாவனத்திற்கு அனுப்பினார். உத்தவனும் அவ்வாறே அங்கு சென்று அவர்களுக்கு ஆறுதலளித்து வந்தான். மகத தேசாதிபதியான ஜராஸந்தன் மீண்டும் இருபத்திமூன்று அக்ஷௌஹிணி சைனியங்களுடன் யுத்தத்திற்கு வந்து சேர, பகவான் மதுரையிலிருந்தோடி கோமந்த பர்வதத்தில் மறைந்து பிறகு அந்த சைனியங்களை எல்லாம் யுத்தத்தில் கொன்று ஜராஸந்தனை துரத்திவிட்டார். 19 பிறகு ஸ்ரீ கிருஷ்ணன் அவருடைய அத்தை புருஷனை தமகோஷராஜனால் பிரேரிபிக்கப்பட்டு மகாலட்சுமியை தரிசிப்பதற்காக அவளுடைய க்ஷேத்திரமான கொல்லாபுரத்திற்கு பலராமன் தமகோஷன் இவர்களுடன் செல்லவும், அங்கு அரசனாயிருந்து வந்த கிருஷ்ணத்வேஷியும் கிருஷ்ணனின் தந்தை வசுதேவனின் மூத்த குமாரனுமான சிருகாள வாஸுதேவன் கிருஷ்ணனுடன் மகா யுத்தம் செய்ய அவனை பகவான் கொன்று சக்ரதேவனென்ற அவனுடைய குமாரனை ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து ஸம்ரக்ஷித்தார். பிறகு பகவான் மதுரையைவிட்டு த்வாரகையிலேயே வசித்தார். இவ்வாறு வெகு அற்புதமான காரியங்களை லட்சுமி பிரம்மாதிகளைவிட உத்தமரான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் செய்து காட்டினார். 20 விதர்ப்பதேசாதிபதி பீஷ்மகராஜனின் மகளாய் ஸாக்ஷாத் லட்சுமியே ருக்மணியென்று அவதாரம் செய்திருந்தாள். அவளை விவாகம் செய்துகொள்ளாமலிருக்க ஜராஸந்தாதிகள் எத்தனையோ விக்னங்கள் செய்தும்



அவர்களை எல்லாம் தோற்கடித்து அவளை த்வாரகைக்கு அழைத்து வந்து விவாகம் செய்து கொண்டார். க்ஞானம் ஆனந்த முமே வடிவாகக்கொண்ட ருக்மணியுடன் ப்ராகிருத புருஷன் ரமிப்பதுபோல் ஆனந்த ரூபியான கிருஷ்ணர் க்ரீடித்தார். 21 ஸத்ராஜித் ராஜன் என்ற யாதவன் சூர்யமண்டலத்திலுள்ள ஸ்ரீ நாராயணனை பூஜித்து அந்த பகவானிடமிருந்து ஸ்யமந்தக மாணிக்யத்தை அடையப்பெற்றான். அவனுக்கிருந்த லோப புத்தியை பிரகடனம் செய்ய ஸ்ரீ கிருஷ்ணர் அந்த மாணிக்யத்தை தனக்கு சிலநாள் இரவல் கொடுக்கும்படி வேண்ட ஸத்ராஜித் கொடுக்காமல் அதை பெட்டியிலேயே வைத்திருந்தான். ஒரு ஸமயம் அவனுடைய தம்பி பிரஸேனஜித் என்றவன் அதை கழுத்தில் அணிந்துக்கொண்டு குதிரையின் மீதேறி வனத்திற்கு சென்றான். வனத்தில் ஓர் ஸிம்ஹம் அந்த குதிரையுடன் ப்ரஸேனஜித்தை ஸம்ஹாரம் செய்து அந்த மணியை அபகரித்துச் சென்றது. ஸ்ரீ ராமாவதாரகாலத்திய காடியான ஜாம்பவான் அந்த ஸிம்ஹத்தைக் கொன்று ஸ்யமந்தகமணியை தனது குஹைக்குள் கொண்டு போய் தன் பிள்ளையின் தொட்டிலின்மீது கட்டிவிட்டது. வெகு நாளாகியும் தனது தம்பியான ப்ரஸேனஜித் திரும்பிவாராததைக் கண்டு ஸத்ராஜித்ராஜன் ஸ்ரீகிருஷ்ணர்தான் ஸ்யமந்தகமாணிக்யத்திற்காக அவனுடைய தம்பியைக் கொன்றிருக்க வேண்டுமென்று வெளியில் பிரஸ்தாபம் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணர் தனக்குவந்த அபக்யாதியை நீக்கிக்கொள்ள எல்லோருடன் வனம் சென்று வனத்தில் குதிரையுடன் ப்ரஸேனஜித் கொல்லப்பட்டிருந்ததையும் பிறகு ஸிம்ஹம் கொல்லப்பட்டிருந்ததையும் காட்டி இவைகளின் காலடிச்சுவடுகளைப் பார்த்துக்கொண்டு ஓர் குஹையில் பிரவேசிக்கவும் இதரர்கள் குஹாத்வாரத்திலேயே நின்றுவிட்டனர். ஸ்ரீ கிருஷ்ணர் குஹைக்குள்போய் அங்கிருந்த ஜாம்பவானுடன் மகாயுத்தம் செய்து ஸ்ரீராமபக்தனான ஜாம்பவானுக்கு கடைசியில் தன் ராமரூபத்தைக்காட்டி தன் அவதாரரூபங்களான கிருஷ்ணராமாதி ரூபங்களில் யாதொரு பேதமுமில்லை என்பதை பிரசித்தப்படுத்தவும் ஜாம்பவான் தன் ஸ்வாமியான ஸ்ரீ கிருஷ்ணருடன் யுத்தம் செய்த குற்றத்தை நீக்கிக்கொள்ள அந்த மாணிக்யத்துடன் தனது பெண்ணான ஜாம்பவதியைக் கொடுத்து விவாகம் செய்து வைத்தான். பகவான் ஜாம்பவதியை அழைத்துக் கொண்டு ஸ்யமந்தகமணியுடன் த்வாரகைக்கு வந்து சேர்ந்தார். 22

ஸ்ரீகிருஷ்ணர் த்வாரகையில் பெரிய ஸபைக்கூட்டி எல்லோரையும் வரவழைத்து தான் குற்றமற்றவரென்பதை நிரூபித்து ஸத்ராஜித் ராஜனிடம் அந்த மணியைத் தந்தார். ஸத்ராஜித் ராஜன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் பொய் குற்றம் சுமத்தியதற்காக அந்த குற்றத்தை க்ஷமாபனம் செய்துகொள்ள அந்த மணியுடன் தனது மகளான ஸத்யபாமையை ஸ்ரீ கிருஷ்ணருக்கு கொடுத்து விவாகம்செய்து வைத்தான். ருக்மணியைப்போல் ஸத்யபாமையும் ஸாக்ஷாத் லக்ஷ்மியே ஆவாள். அவ்விருவர்களுள் பேதமே இல்லை. ஆகலால் ஸர்வோத்தமனான ஸ்ரீகிருஷ்ணர் அவளை மணந்தார். ஸ்யமந்தகமணியை மட்டில் அதில் அதிக ஆசையைக்கொண்டிருந்த ஸத்ராஜித் ராஜனிடம் கொடுத்திருந்தார். 23. ஸால்வதேசாதிபதியான பிரம்மதத்த ராஜனின் குமாரர்களான ஹம்ஸன் டிபிகன் என்ற மகா அஸுரர்கள் தம் தந்தைக்கு ராஜஸூயயாகம் செய்து வைத்து ஸ்ரீ கிருஷ்ணரை அவமானப்படுத்தக்கருதி ஓர் பிராம்மணன் மூலமாய் ஸ்ரீ கிருஷ்ணரை தம்மிடம் வந்துகப்பம கட்டும்படி செய்தி சொல்லி அனுப்பினார்கள். பகவான் பாணங்களால் அப்படியே கப்பம்கட்டுவதாய்ச் சொல்லியனுப்பி யாதவ சைனியங்களுடன் அவர்களோடு மகா யுத்தம் செய்து அவர்களின் சைனியங்களை எல்லாம் நாசம் செய்து ஹம்ஸனைக்கொல்ல வைஷ்ணவாஸ்திரத்தை எடுக்க, ஹம்ஸன் அதைக்கண்டு பயந்தோடி யமுனையின் ஜலத்தில் ஒளிந்துகொள்ள, ஸ்ரீ கிருஷ்ணர் அவனை பிடித்து காலால் அவனுடைய தலையில் ப்ரஹாரம் செய்யவும் அவன் அதைத்தாளாமல் மகாமூர்ச்சையடைந்து அங்கிருந்த திருதராஷ்டிரனென்னும் கடும் பாம்பின் வாயில் விழுந்து மரண துக்கத்தை இன்னமும் அடைந்து வருகிறான். இந்த மன்வந்தரம் முடிய அந்த துக்கத்தை அநுபவித்துவிட்டு பிறகு பிராணனை விட்டு அந்தம்தமஸ்ஸை அடையப்போகிறான். அவனுடைய தம்பியான டிபிகன் யமுனையின் ஜலத்தில் வெகுநேரம் தேடியும் அண்ணனைக் காணாமல் மனம் நொந்து தனது கையால் தன் நாவைப் பிடுங்கிக்கொண்டு இறந்துபோய் அந்தம் தமஸ்ஸை அடைந்தான். இவ்வாறு ஹம்ஸடிபிகர்களை பகவான் ஸம்ஹாரம் செய்து தன்னை ஆசிரயித்த பக்தஜனங்களைசந்தோஷப்படுத்திக்கொண்டு ருக்மணி முதலிய பத்னிமார்களுடன் த்வாரகையில் தனது அரண்மனையில் விளங்கிவந்தார். ஸ்ரீகிருஷ்ணர் ருக்மணியிடம் ப்ரத்யும்னன் சாருதேஷ்ணன் முதலான பிள்ளைகளையும் ஜாம்பவதியிடம் ஸாம்பனையும், ஸத்யபாமையிடம் பானு என்பவனையும் உண்டாக்கினார்



# ஸ்ரீமத்வமத கிரந்தங்கள்.

(முன் தொடர்ச்சி.)

26. ஆத்யம் சேஷதாஸாசாரியார். (உத்தராதி மடம்.)
237. சந்திரிகாடிப்பணி.
238. மித்யாத்வானுமான கண்டனடிப்பணி.
239. ஜயதீர்த்த அஷ்டகம்.

27. ஆத்யம் ராமகேசவாசாரியார். (உத்தராதிமடம்.)
240. ஆத்யவம்சப்ரதீபம்.
241. கிரஸ்தாஸ்த நிர்ணயம்.
242. கிருஷ்ணாஷ்டமி நிர்ணயம்.

28. ஸ்ரீமுஷ்ணம் சேடி கோணேரி ஆசாரியார். (உத்தராதிமடம்.)
243. மகாபாரத தாத்பர்ய நிர்ணய [டீகை. 245. சைவசைலாசனி.
244. ஹயக்ரீவதண்டகம். 246. ஸங்கிரஹராமாயண டீகை.

29. ஸ்ரீமுஷ்ணம் அனந்தபட்டாசாரியார். (உத்தராதி மடம்.)
247. ப்ரமாணலக்ஷணடிப்பணி. 255. கர்மநிர்ணயடிப்பணி.
248. கதாலக்ஷணடிப்பணி. 256. தத்வநிர்ணயடிப்பணி.
249. உபாதிகண்டனடிப்பணி. 257. ஐதரேயடிப்பணி.
250. மாயாவாதகண்டனடிப்பணி. 258. பிருஹதாரண்யகடிப்பணி.
251. பிரபஞ்சமித்யாத்வானுமான கண்டனடிப்பணி. 259. சாந்தோக்யடிப்பணி.
252. தத்வஸங்கியானடிப்பணி. 260. தாத்பர்யநிர்ணயடீகா.
253. தத்வவிவேகடிப்பணி. 261. நியாயஸுதாடிப்பணி.
254. தத்வோத்யோதடிப்பணி. 262. தத்வப்ரகாசிகாடிப்பணி.

30. ஸ்ரீமுஷ்ணம் நரஸிம்மாசாரியார், ஸ்ரீரகூத்தமரின் சீடர். (உத்தராதி மடம்.)
263. குணமாணிக்யமாலா.

31. ஸ்ரீமுஷ்ணம் வியாகரணம் சுப்பராயாசாரியார். (உத். மடம்.)
264. ஸூத்ரார்த்தமஞ்ஜரி.

32. ஸ்ரீரகுநாததீர்த்தர். (வியாஸராஜமடம்.)
265. சேஷசந்திரிகை. (தாத்பரிய சந்திரிகை 3. 4. அத்) 268. பிருஹதீஸஹஸ்ர வ்யாக்யா
266. தந்திரஸாரடிப்பணி. 269. கர்மநிர்ணயடிப்பணி.
267. பதார்த்தவிவேகம். 270. ஈசாவாஸ்யடிப்பணி.

33. ஸ்ரீரகூநாததீர்த்தர். (உத்தராதிமடம்.)
271. ஈசாவாஸ்யடிப்பணி.

34. ஸ்ரீவேதேசதீர்த்தர், (உத்தராதிமடம்.)
272. ப்ரமாணபத்ததிடிப்பணி.
273. தத்வோத்யோதடிப்பணி.
274. தலவகாரடிப்பணி.
275. சாந்தோக்யடிப்பணி.
276. அதர்வடிப்பிணி.
277. காடகடிப்பணி.
278. ப்ரமாணலக்ஷணடிப்பணி.
279. தத்வநிர்ணயடிப்பணி.
280. ஐதரேயடிப்பணி.

35. ஸ்ரீவித்யாதீசதீர்த்தர். (உத்தராதி மடம்.)
281. வாக்யார்த்த சந்திரிகை (ஸுதாடிப்பணி.)
282. தலவகாரகண்டார்த்தம்.
283. ஓம்காரவாதார்த்தம்.
284. த்வித்வவாதார்த்தம்.
285. திதித்ரய நிர்ணயம்.
286. ஜன்மாஷ்டமி நிர்ணயம்.

36. ஸ்ரீ ஸத்யநாததீர்த்தர். (உத்தராதி மடம்)
287. பரசு ஸுதாடிப்பணி.
288. அபிநவசந்திரிகா (தத்வப்ரகாசிகாடிப்பணி.)
289. அபிநவதாண்டவ (தர்க்கதாண்டவடிப்பணி.)
290. அபிநவாமிருத (நியாயாமிருத டிப்பணி.)
291. அபிநவகதா.
292. கர்மநிர்ணயடிப்பணி.
293. விஜயமாலா.
294. உபாதிகண்டனடிப்பணி.
295. மாயாவாதகண்டன டிப்பணி.
296. மித்யாத்வானுமான கண்டன டிப்பணி.
297. ரிக்பாஷியடிப்பணி.
298. வாயுபாரதீஸ்தோத்திரம்.

37. ஸ்ரீ ஸத்யாபிநவதீர்த்தர் (உத்தராதி மடம்.)
299. ஸம்பந்ததீபிகா.
300. தாத்பர்யநிர்ணயடிப்பணி.
301. துர்கட பாவதீபிகா பாகவத டிப்பணி.
302. சிரவண த்வாதசி நிர்ணயம்.

38. ஸ்ரீ ஸத்யப்ரக்ஞதீர்த்தர், (உத்தராதி மடம்.)
303. பாகவத துர்கடார்த்தவிவ்ருதி
304. தந்திரஸாரவ்யாக்யானம்.
305. கீதா தாத்பர்யடிப்பணி.
306. தத்வஸங்கியானடிப்பணி.

39. யாதவாசாரியார், (உத்தராதி மடம்.)
307. நியாயஸுதாடிப்பணி.
308. யமகபாரத வ்யாக்யானம்.
309. தத்வஸங்கியானடிப்பணி.
310. பாகவத 1–7 ஸ்கந்தவ்யாக்யா.
311. விஷ்ணுஸ்தவனம்.
312. வியாஸகத்யம்.
313. கராவலம்பனஸ்துதி.
314. பாகவததாத்பரிய 1 ஸ்கந்த டிப்பணி.

40. உமர்ஜி திருமலாசாரியார், யாதவாசாரியாரின் சிஷ்யர்.
315. த்வாதசஸ்தோத்ர வ்யாக்யானம்.
316. பாவப்ரகாசம் ப்ரமேயதீபிகாடிப்பணி.
317. சிவஸ்துதி டீகை.

(தொடரும்.)



# காடகோபநிஷத்.

(முன் தொடர்ச்சி) முதலாவது வல்லி.

மிக்கவேண்டியவரான ஹே நசிகேதஸ்ஸே! நீங்கள் அப்பேர்பட்ட புத்தியை அடைந்திருக்கிறீர். ஆதலால் நீர் சலிக்காத தைரியமுள்ளவராய் இருக்கிறீர். நான் பலவகையாய் ஏமாற்றப் பார்த்தும் ப்ரம்மஸ்வரூப புத்தியில் தைரியத்தை நீர் விடாமலிருந்தது ஆச்சரியம். எமக்கு உம்மைப் போன்ற பிரசினம் செய்கிறவர் கிடைக்கமாட்டார். நீங்கள் கேட்ட விஷயம் எனக்குத் தெரியாதென்று நான் உங்களை ஏமாற்றப்பார்க்கவில்லை. நான் உங்களை பரீக்ஷித்தேன். நீங்கள் கேட்ட ப்ரம்ம ஸ்வரூபத்தை நான் அறிவேனென்றார் யமதேவன். 9. அ என்ற எழுத்தால் சொல்லப்படுகிறவரான பரபிரம்மம் நிதியைப்போலுள்ளது என்றால் பரம புருஷார்த்தத்திற்கு காரணமானதென்று அறிவேன். சாசுவதமான அந்த பரபிரம்மம் பிரம்ம ஞானம் பக்தி முதலியவை இல்லாதவர்களால் அடையப்படுகிறதில்லை. ஆகவே ஹே நசிகேதஸ்ஸே! பரபிரம்மத்தையே எப்போதும் கொண்டிருக்கும் மனஸ் முதலிய த்ரவ்யங்களால் என்னால் இஷ்டக சிதியில் உள்ள அக்னி நாமகபரமாத்மா பூஜிக்கப்பட்டார். அந்த பூஜாமகிமையால் சாசுவதமான பரபிரம்மத்தை அடைந்திருக்கிறேன். 11. நான் மட்டில் அறிந்திருக்கிறேனென்றில்லை. என்னுடைய அனுக்ரஹத்தால் நீங்களும் அறிந்திருக்கிறீர்களென்கிறார். ஹே நசிகேதஸ்ஸே: ஜகத்துக்கு தாரகனும் பகவத் ஞானத்திற்கு அக்ஷயமான பலனைத்தருகிறவரும், அபயமான மோக்ஷத்தை அளிப்பவரும் ஸ்தோத்திர ஸாதனமான மந்திரங்களைவிட சிரேஷ்டனும் அந்த வேத சமூகங்களால் பூராவாய் ப்ரதிபாதனம் செய்யப்பட முடியாதவரும், மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவரும், முக்தர்களின் ஆசிரமாயுள்ளவருமான விஷ்ணுவை அறிந்துகொண்டு மனோதார்ட்யத்தால் திரவியம் முதலான ஐஹிக காமனைகள் கிடைப்பதை பூராவாய் நிராகரித்தீர்.

12 நீங்கள் மட்டிலுமன்று. உங்களைப்போன்ற மற்றவர்களும் அந்த பகவத் ஞானத்தால் திருப்தியடைகின்றனவரென்கிறார்., அதிகாரிகளால் அதிக ப்ரயத்தனத்தால் அறியப்படு கிறரும் வெளியாகாமலிருப்பவரும், எல்லா ஜகத்திலேயும் ப்ரேரகராய் பிரவேசித்திருப்பவரும், ஸர்வப்ராணிகளின் ஹிருதய குஹையில் வசிப்பவரும், முக்தர்களான ஜீவர்களிலிருப்பவரும், புராதனமானவரும், க்ரீடாதி குணவிசிஷ்டருமான விஷ்ணுவை த்யானமாகிய உபாயத்தைக்கொண்டு அறிந்து அந்த தீரன், விஷயங்கள் கிடைப்பதால் சந்தோஷத்தையும் விஷயங்கள் கிடைக்காததலால் துக்கத்தையும் ஆகிய ஸுகதுக்கங்களை விட்டுவிடுகிறான். என்றால். பகவத் ஞானத்தால் திருப்தியடைந்தவனாய் பரமாநந்தம் நிறைந்தவனாயாகிறான். இந்த ஞானம் மகான்களின் உபதேசத்தால் உண்டாகுமென்றறிவிக்கிறார். 13 எந்த அதிகாரி இந்த ப்ரம்மஸ்வரூபத்தை பெரியோர்களிடமிருந்து உபதேசம்பெற்றிருக்கும் ஆசாரியாளிடமிருந்து சிரவணம் செய்து ஜகத்தை தரிப்பவனும் சூக்ஷ்மமாயிருப்பவனுமான பகவானை ஜீவனைவிட பின்னன் என்று நன்றாய் அறிந்தும் அப்படியே ஜீவனைவிட பின்னனாய் முக்த ஜீவர்களிலும் இருக்கிறானென்று அறிந்திருப்பானோ அவன் பரமாத்மாவை அடைந்து சந்தோஷப்படுகிறான். ஏனென்றால் சந்தோஷிக்கத்தகுந்தவனை அடைந்திருக்கிறான். பகவானை அறிந்திருக்கும் நசிகேதஸ்வின் பொருட்டு வைகுண்டத்தின் வாசல் திறந்திருப்பதாய் நான் அறிகிறேன். ஸர்வகாம்ய விஷயங்களையும் விட்டு பிரம்மக்ஞானியான உம்மால் பிரம்மக்ஞானம் வேண்டப்பட்டதால் நீங்கள் ப்ரசஸ்தராவீர். 14. யமதேவா! என்னை துதித்தது போதும். தத்வத்தைச் சொல்லு மென்கிறார் நசிகேதஸ். தர்மமில்லாததும் அப்படியே அதர்ம மில்லாததும், ப்ரத்யக்ஷஸித்தமான கார்யகாரண ப்ரபஞ்சத்தினின்றும் விலக்ஷணமானதும், நடந்தது இனி நடக்கப்போவது இவைகளை விட விலக்ஷணமானதுமான அப்பேர்ப்பட்ட லோக விலக்ஷணமாயுள்ளதென்று பிரஸித்தமாயுள்ள வஸ்துவை நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ அதை எனக்கு உபதேசம் செய்யுங்கள். 15. இப்படி நசிகேதஸ் பிரசினம் செய்த பிரம்மஸ்வரூபத்தைச் சொல்வ



தற்காக முதலில் அந்த பரமாத்மாவின் மாகாத்மியத்தைச்சொல்லி விட்டு பிறகு பிரம்மஸ்வரூபத்தை சொல்வதாய் ப்ரதிக்ஞைசெய்கிறார். ஸமஸ்தமான வேதங்களும் யாருடைய ஸ்வரூபத்தை முக்ய விருத்தியால் போதிக்கின்றனவோ, யாருடைய ப்ரீதிக்காக ஸமஸ்தமான கர்மாக்களையும் வேதங்கள் சொல்லுகின்றனவோ, யாருடைய ப்ரீதியைவிரும்பி மகான்கள் பரபிரம்மத்தை அடைவிக்கும் சிரவணாதிகளையும் ஊர்த்வரேதஸ்ஸாயிருப்பது முதலான விரதத்தையும் செய்கின்றனரோ, அந்த ப்ரம்மஸ்வரூபத்தை உமக்கு நான் ஸங்கிரஹமாய்ச் சொல்லுகிறேன் என்று யமன் சொன்னார். அதற்கு நசிகேதஸ் இது ஓம் என்றார். நீங்கள் எனக்குச் சொல்வதாய் ஒப்புக்கொண்ட ப்ரம்மஸ்வரூபம் நீங்கள் சொன்னபடித்தானிருக்கிறதென்று நசிகேதஸ் ஒப்புக்கொண்டதாகும். அல்லது யமனே அந்த ப்ரம்மஸ்வரூபம் ஓம் என்று வேதத்தில் சொல்லப்படுகிறதென்று சொன்னதாய் வைத்துக்கொள்ளலாம். 16. ப்ரம்மஸ்வரூபத்தை சொல்லத்துவக்கும்முன் ப்ரம்மஸ்வரூபத்தை அறிந்தவனின் பலனையும் அவனுடைய மகிமையையும் சொல்லுகிறார். நீங்கள் ப்ரச்னம் செய்தது நாசரகிதமானதும் குணபூர்ணமானதுமான பரப்ரம்மமே. இதுதான் பரமாக்ஷரமென்று பெயருள்ளது. இந்த பரமாத்மாவையே அறிந்து எந்த அதிகாரி இஷ்டமான எந்த வஸ்துவை விரும்புகிறானோ அந்த அதிகாரிக்கு அந்த இஷ்டமுண்டாகிறது. 17. நீங்கள் ப்ரச்னம் செய்த ப்ரம்மமே எல்லோருக்கும் உத்தமமான ஆசிரயம். விலக்ஷணமான ஆசிரயமாகும். விலக்ஷ ஆசிரயனான அந்த பரமாத்மாவை அறிந்துகொண்ட அதிகாரி பகவானுடைய வைகுண்டாதி லோகங்களில் பூஜிக்கப்படுகிறான். 18. அங்கு வசிப்பவன் எவ்வாறு இருக்கிறானென்றால் வைகுண்டாதி லோகத்தை அடையப்பெற்ற ஞானி சரீர ஸம்பந்தமாகிய ஜனன முள்ளவனாய் ஆவதில்லை. சரீர வியோகமாகிய மரண முள்ளவனாய் ஆவதில்லை. ஏனெனில் இந்த பரமாத்மா எந்த காரணத்தைக்கொண்டும் ஜனனமடைவதில்லை மரணமடைவதில்லை. அப்பேர்ப்பட்ட பகவானை அடைந்த முக்தனுக்கும் சரீரபந்தம் சரீர வியோகமாகிய ஜனனம் மரணம் இவைகளில்லை. ஸ்வரூபத்திற்கு ஜனன மரணமில்லை

என்று சொல்லலாமே! முக்தனுக்கில்லை என்று ஏன் சொல்ல வேண்டுமென்றால் ஸம்ஸாரத்தில் பந்தமடைந்த காலத்திலும்கூட ஜீவனுக்கு ஸ்வரூபத்தால் ஜனன மரண மில்லாதிருக்கும்போது முக்தனுக்கு எப்படி உண்டாகு மென்கிறார். ஸம்ஸாரியான ஜீவனும் கூட ஸ்வரூபத்தால் பிறப்பதில்லை இறப்பதில்லை. ஜனனம் மரணம் ஜீவனுடைய சரீரத்திற்குதான். ஜீவன் சரீரத்துடனிருக்கும் பொழுதுதான் ஜனித்தான் இறந்தானென்று சொல்லப்படுகிறான். இந்த ஜீவன் சரீர பந்தமடைந்திருப்பினும் நித்யன். சொரூபத்தால் ஜனனமற்றவன். விருத்திஹ்ராஸம் முதலான விகாரமில்லாதவன். இப்படியிருக்க முக்தியில் ஒருவனும் ஸ்வரூபபத்தால் பிறப்பதில்லை இறப்பதில்லை. ஜீவனுடைய ஸ்வரூபத்திற்கு ஸம்ஸாரத்திலேயும் சரியே முக்தியிலேயும் சரியே எப்போதும் ஜனனம் மரனனம் இவை இல்லை. அப்படியானால் சரீரநாசமுண்டோவென்றால் அவனுடைய சரீரம் கொல்லப்பட்டாலும் ஜீவனுடைய ஸ்வரூபம் கொல்லப்படுவதில்லை. 19. அப்படியாயின் இவன் கொன்றான் இவன் கொல்லப்பட்டானென்று தோன்றுகிறதே என்றால் அதுப்ராந்தி என்கிறார். கொல்கிறவன் ஜீவனுடைய. ஸ்வரூபத்தைக் கொல்கிறவனாய் தன்னை அறிந்தாலும் கொல்லப்பட்டவன் தன் ஜீவஸ்வரூபம் கொல்லப்பட்டதாய் அறிந்தாலும் இந்த கொல்லுகிறவன் கொல்லப்படுகிறவன் இருவர்கள் நன்றாய் அறிந்தவர்களன்று. அவர்கள் பிராந்தியடைந்தவர்கள். ஏனெனில் நான் கொல்லுகிறேனென்று அறிகிறவன் ஜீவனுடைய ஸ்வரூபத்தை கொல்ல முடிவதில்லை. கொல்லப்பட்டதாய் அறிந்து கொண்டவனின் ஜீவஸ்ரூபமும் கொல்லப்படுவதில்லை. ஏனெனில் ஜீவனுடைய ஸ்வரூபம் நித்யமானது. நாசம் ஏற்படுவதால் இவ்வாறு ப்ரமம் உண்டாகிறது. 20 இவ்வாறு ப்ரம்மஞானிக்கு ஏற்படும் பலன்களைச் சொல்லி ப்ரேத ஜீவன்களை நியமனம் செய்யும் பிரம்மத்தை உபதேசம் செய்கிறார். பரமாத்மா அணுவான அதாவது சூக்ஷ்மமான வஸ்துகளைவிட மிகவும் சூக்ஷ்மமாய் இருக்கிறார். (தொடரும்.)



## ஹரிபஜனை இரவிலதிகநேரம் தகாது.

(முன் தொடர்ச்சி.)

ஒன்றும் தெரியாத பாமர ஜனங்கள் பக்தர்களைப்போல் காட்டிக்கொண்டு பக்தர்களின் வேடம் தரித்து அவரவர்கள் செய்யவேண்டிய வர்ணாசிரமோசிததர்மங்களை விட்டு அவர்களின் மனம்போன படிக்கெல்லாம் நடந்து கொண்டு, கண்டவிடமெல்லாம் சஞ்சரித்துவிட்டு லக்ஷ்மீபதியின் குணநாம கீர்த்தனங்களைச் சொல்லிவந்தால் தானென்ன, அவர்கள் தாமஸ பக்தர்கள் தாமஸ தாஸர்கள் என்றறிவாய். கோரமான தமஸ்ஸு அவர்களுக்கு கட்டாயம் வந்துசேருகிறது. இதில் சந்தேகமில்லை. இப்படி கீர்த்தனங்களைச் சொல்வதால் இங்கு அவர்களுக்கு மிருஷ்டான்ன போஜனம் நல்ல வஸ்திரம் முதலான பலன்கள். கிடைத்துவருகிறதென்று அகமகிழ்ந்துபோய் முடிவில் கோரமான தமஸ்ஸையே அடைகிறார்கள். அவரவர்களின் அபீஷ்டத்தை அளிக்கும் ஸர்வேசுவரன் ஏற்படுத்தியிருக்கும் அநாதியோக்யதையை அனுஸரித்து பகவான் யாரை உண்மையான தன்னுடைய பக்தனென்று ஒப்புக்கொண்டு இருக்கிறாரோ அவனிடமிருந்துதான் தன் குண நாமகீர்த்தனங்களை வெளியாக்கி அவனுக்கு அபரோக்ஷ ஞானத்தைத்தருகிறார். இந்த ஹரிதாஸர்களின் மகாபாக்யத்திற்கு ஸமமானதொன்றிருப்பதாய் நான் காணேன், காணேன். இந்த தத்வத்தை அறியாமல் வீண் பிரமமடைந்து அசாஸ்திரீயமானதை சாஸ்திரீயமென்றெண்ணி செய்யத்தகாததை செய்யலாமென்று பிரமித்துப்போய் தமஸ்ஸை அடையாதே. காமஜனகனை எமது விஜயவிட்டலனின் பூஜையை முதல்யாமத்தில் செய்து முடித்து ஆனந்தப்படவேண்டும். என்றிவ்வாறு ஸ்ரீவிஜய தாஸர் வெகு ஸ்பஷ்டமாய் ஹரிதாஸர்களின் உண்மையான நிலையை அறிவித்திருப்பதுடன் ஹரிபஜனைகளை இரவுமுதல் யாமத்தில் முடிக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். ஆதலால், மாத்வ ஸம்பிரதாயத்தை அனுஸரித்து நடக்கும் பஜனை கோஷ்டியாராவது இந்த தாஸவர்க்கத்தின் நியமனத்தை அனுஸரிக்கவேண்டியதவசியமாகும். பண்டிதர்களான ஆசாரியர்கள் சாயங்காலத்தில் ஸத்யாவந்தனம் செய்துகொண்டு சிவஸ்துதி, இந்திராக்ஷி ஸ்தோத்திரம், நாராயணவர்மம் கிருஷ்ணஸ்துதி, கோபி கீதை முதலியவைகளைச்சொல்லி மங்களாரத்தி செய்வது வழக்கம். ஹரிதாஸர்கள் ஸாயங்காலத்தில் அந்த ஸம்பிரதாயப்படி பிராசீன தாஸர் பதங்களைச் சொல்லி ஸ்வாமி பெட்டியின் முன்

னிலையில் நர்த்தன ஸேவாதிகளுடன் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளைச் செய்து மங்களாரத்தி செய்வது வழக்கம். ஸ்திரீகள் ஸாயங்காலத்தில் பகவானுக்கு தீபம் ஏற்றிவைத்தவுடன் தங்களுக்குத்தெரிந்த தாஸர் பதங்களைச் சொல்லி நமஸ்காரம் செய்வது வழக்கம். ஏகாதசியன்று மட்டில் அவர்கள் கும்பல்கூடி பிராம்மணுளைக்கொண்டு பகவானுக்கு மங்களாரத்தி செய்யச்செய்து தாஸர் பதங்களை 3-வது யாமம் முடிய சொல்லிவிட்டு காரியங்களைச்செய்து த்வாதசி சமையலுக்குப் போவது ஸம்பிரதாயம். இந்த ப்ராசீன ஸம்பிரதாயங்களை அனுசரித்துத்தான் ஸாமானிய புருஷர்களிலும் ஹரிபஜனை என்பது ஏற்பட்டு அவர்களால் முன்னேரங்களில் நடத்தப்பட்டு வந்தது. இப்பால் இதன் உண்மையை அறியாமல் இரவில் வெகுநேரமும் போஜனமானபின்பும் பஜனையை சிலர் செய்கின்றனர். சிலர் இரவு முழுமையும் மனம்போனபடிக்குபஜனை என்று காலத்தை கழிக்கின்றனர். அதை பகவானுக்கு அர்ப்பணம் செய்கின்றனர். இவ்வாறு பலவகையாய் நடந்துவருவது சாஸ்திரீயமாகாததோடு ஹரிதாஸ ஸம்பிரதாயத்தை அனுஸரித்ததாயில்லை என்று சொல்ல நான் துணிகிறேன். இரவு முதல் யாமத்திற்கப்பால் செய்யும் ஸாதனங்களுக்கே கோரமான பலன்களைச்சொல்லியிருக்க அஸுரர்களின் காலமாயும் மகாநிசா என்று எல்லா ஸத்கர்மங்களுக்கும் விரோதியானதென்று எங்கும் ஸ்பஷ்டமாய் நிஷேதிக்கப்பட்டிருக்கும் நிசாகாலத்தை வியாபித்ததாயுமுள்ள இராத்திரி காலம் முழுவதும் பஜனை செய்தால் அவர்களுக்கு பலவகை மகாபாபங்கள் வந்து சேருமென்று மேற்கண்ட தாஸ வாக்யங்களால் ஏற்படுகிறது. (1) பஜனை செய்த பலன் ஸ்ரீஹரிக்கு சேராதிருக்கும்படி செய்த மகாபாபம். (2) பாபிஷ்டர்களான அஸுரர்களுக்கு புண்யபலன் வரும்படி செய்து அவர்களை பலிஷ்டர்களாய் செய்த மகாபாபம். (3) அவரவர்கள் தம்தம் தர்ம பத்னியுடன் சரியான காலத்தில் நித்ரைசெய்து ப்ராக்ஞ நாமக பரமாத்மாவிடம் போய் சேராமல் சுகிக்கத்தயாராக இருக்கும் ஸதிபதிகளின் அந்தர்கதர்களாயுள்ள வாயுபாரதி இவர்களைப்பிரித்த மகாபாதகம். (4) சாஸ்திரநிஷித்தமான காரியத்தைச்செய்த மகா பாபம். (5) பிரமாண வசனங்களையும் ஸத்ஸம்பிரதாயத்தையும் அவமதித்த மகாபாபம். ஆக இப்படி பலவகை பாபங்கள் வந்துசேரும். ஆதலால் மாத்வஸம்பிரதாயத்தை அனுஸரித்து பஜனைகளை நடத்துகிறவர்கள் இரவு முதல் யாமத்திலேயே அதை முடித்து அந்தபஜனை ஸ்ரீஹரிக்கே ஸமர்ப்பணம் செய்து ஸகல ஸௌபாக்யங்களைப்பெறுவார்களாக.

மைசூர் நரஹரிதாஸர். 10—5—32.



## விக்ஞாபனம்.

அநேகவருஷ காலங்களாய் திருப்பதிக்கடுத்த திருச்சானூரில் நடைபெறும் மத்வஸித்தாந்தஸபா காலத்தில் யாத்திரையாக வருபவர்களின் குழந்தைகளுக்கு பாலும் பாலகர்களுக்கு காலை போஜனம் முதலியவைகளையும் பிரதி வருடமும் நான் செய்து வருவது தேசத்தில் அநேகருக்கும் தெரிந்த விஷயமே. அம்மாதிரியான தர்மத்தை திருப்பதி மலையின்பேரிலும் பிரம்மோற்சவகாலத்தில் பத்து நாட்களும் செய்ய நான் ஆரம்பித்து சென்ற வருடம் நடந்தது. இவ்வருடம் ஆசுவீஜசுக்த ப்ரதமை முதல் தசமி வரையில் (1-10—32 முதல் 9-10—32 வரை) நடக்கப்போகும் பிரம்மோற்சவத்தில் மேற்கண்ட தர்மங்கள் சரியாய் நடைபெற தர்மபிரபுக்கள் தங்களால் இயன்றவரை ஸகாயம் செய்ய பிரார்த்திக்கிறேன்.

என் விலாசம்:—குப்புராவ்,
வெள்ளிக்காடு, மதுராந்தகம் தாலுக்கா,
செங்கல்பட்டு ஜில்லா.

## விளம்பரம்.

### ஸ்ரீ வாயுஸ்துதியும் அதன் ஜபமும்.

ஸ்ரீ த்ரிவிக்ரமபண்டிதாசாரியாரால் இயற்றிய ஸ்ரீ ஹரிவாயுஸ்துதியின் மூலத்தை தேவநாகர அக்ஷரத்திலும் அதன் அர்த்தத்தை தமிழிலும் எழுதி தனிப்புஸ்தகமாக பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீவாதிராஜஸ்வாமிகள் இயற்றிய புனஸ்சரண விதியின்படி வாயுஸ்துதியின் இன்ன இன்ன சுலோகத்தில் இன்ன பலன் ஏற்படும் என்பதையும் அந்த சுலோகங்களை ஜபிக்கும் விதம், ஸ்தலம் காலம் த்யான சுலோகங்கள் முதலியவைகளையும் விஸ்தாரமாய் தமிழில் எழுதி இதில் வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு பிரசுரிக்க அநேகர் பலநாட்களாய் வற்புறுத்தி வந்ததால் சொற்பகாபிகள்தான் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா ஐந்து. தபாற்கூலி அணா ஒன்று.

பாகவத ரங்கநாதாசாரியார்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

## திருக்குடந்தை புராணவசனம்.

உலகமே புகழும் கும்பகோண மகாக்ஷேத்திரமான்மியம் கற்றோருமற்றோருமாகிய யாவருககும் எளிதிலே பயன்படும் பொருட்டு இனிய தமிழ்வசன நடையில் அறுபத்திரண்டு படலங்களாக எழுதப்பட்டுள்ளது. தலத்தேவாரமும் திருவாய்மொழியுமுள்ள. பிரம்மதேவர் சூரியன் அகஸ்தியர் முதலியன பலரும் விதிப்படி மகாமகதீர்த்தந்தோய்ந்து ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் முதலிய பலரையும் போற்றி எண்ணியவை எண்ணியவாறே பெற்று அன்புற்று இன்புற்றனரெனில் இதன் பெருமையை உரைக்கவல்லார் யார்? அச்சில். விலை ரூ. 1-0-0.

M. சிங்காரவேலு பிள்ளை,
மூர்த்திசெட்டித்தெரு, கும்பகோணம்.

### மதிப்புரை

## ஸநாதன தர்ம காமதேனு.

இப்பெயர்கொண்டு தமிழில் ஓர் மாதப்பத்திரிகை திருவனந்தபுரத்திலிருந்து வெளிவருவதாய்த் தெரியவருகிறது. இதன் ஆசிரியர் ஈரோடு மகாஜன ஹைஸ்கூலில் ஸம்ஸ்கிருத பண்டிதராய் முப்பது வருடகாலமிருந்து வயது முதிர்ந்தமையால் தற்போது அதனின்றும் விலகியிருக்கும் ஸ்ரீமத்வ சாஸ்திர சம்பன்னரான மந்திராலயம் கிருஷ்ணாசாரியாராவார். அவர் ஸ்ரீபகவத்கீதை பாகவதம் முதலியவைகளை ஆங்காங்கு உபன்யாஸங்களைச் செய்து பிரசித்திபெற்றவர். இவர் தமது "மித்திரர்கள் யாவரும் ஸநாதனமான புராண இதிஹாஸங்களின் ஸாரத்தையும் அதன் உண்மையையும் இன்னதென அறிந்துகொள்வதற்காக புராதனமான அனேக கிரந்தங்களைப் பரிசீலனை செய்து வடமொழியில் இருக்கிறதைத் தமிழில் மொழிபெயர்த்து மாத சஞ்சிகை ரூபமாய் வெளியிடுவது தமது நோக்கம்' என்றறிவித்துள்ளார். காமதேனுவானது ஸ்வர்க்கத்தில் இருப்பதால் தேவர்கள் எவ்வளவு பயனை அடைகிறார்களோ அதுபோல் இபபத்திரிகையானது ஸ்ரீ பத்மநாபரின் அனுக்ரஹத்தால் நமக்கு ஸகல ச்ரேயஸ்ஸையும் கொடுக்க வெளிவந்த காமதேனு என்று இப்பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்ததேயாகும். த்ரிமதஸ்தர்களுக்கும் பொதுவானதாயுள்ள வர்ணாசிரமதர்மங்களைப்பற்றி நிரூபங்கள் இதில் காணப்படுகின்றன. வருட சந்தா ரூ. மூன்று.



# ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(பதின்மூன்றுவது அத்தியாயம்.)

(காபி ரைட்) முன் தொடர்ச்சி.

---

## மதுரையில் விசித்ர லீலைகள்.

மதுராபட்டணம் வந்த பின் அஸஹாயமான பராக்கிரமமுள்ள ஸ்ரீகிருஷ்ணன் அக்ரூரனை முன்னாடி அனுப்பிவிட்டு பலராமனுடனும் சகாக்களான கோபாலகர்களுடனும் கூடி மதுராபட்டணத்தைப் பார்ப்பதற்காக அங்கு ராஜவீதியில் குதூஹலமடைந்த அந்நகரத்தார்களால் நன்கு பூஜிதராய்ப் புறப்பட்டார். அங்கு யானையின்மீதேறிவந்த வண்ணானை அணுகி தாம் உடுத்திக்கொள்ள வஸ்திரங்களை ஸ்ரீகிருஷ்ணர் யாசித்தார். கம்ஸனுக்கு ப்ரியனானவனும் பார்வதியின் வரத்தால் மரணமில்லாதவனுமான அந்த வண்ணான் ஸ்ரீகிருஷ்ணனை துர்வாக்யங்களைச் சொல்லி நிந்திக்கவும் ஸ்ரீகிருஷ்ணன் அக்ஷணமே தைத்யனான அந்த பாபி வண்ணானை தன் கையின் நுனியால் அவனுடைய சிரச்சேதம் செய்து யமலோகத்திற்கனுப்பினார். நாசமற்ற பலமுள்ள ஸ்ரீகிருஷ்ணன் அந்த வண்ணானை ஸம்ஹரித்துவிட்டு தனக்குத்தகுதியான வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு பலராமனுக்கு அவனுக்கு உசிதமான நீல வஸ்திரங்களைக் கொடுத்து சகாக்களான கோபாலகர்களுக்கு மற்ற வஸ்திரங்களைக் கொடுத்துவிட்டு மீர்ந்த வஸ்திரங்களை நடுத்தெருவில் பாவச்செய்து அந்த வஸ்திரங்களின்மீது காலடி வைத்துக்கொண்டு ராஜமார்க்கத்தில் நடந்தார். ஏற்றுக்கொள்ளவேண்டிய பொருள்கள் தள்ளவேண்டியபொருள்கள் என்றில்லாதவரும் முக்ய ஞானாத்மகமான அடர்ந்த ஸ்வரூபாநந்த பூர்ணமான சரீரமுள்ளவனாயினும் விருத்திஹ்ராஸமில்லாதவனும் அப்ரமேயனுமான ஸ்ரீகிருஷ்ணர் ஜனங்களை அனுகரணம் செய்துகொண்டு சாமானிய மனுஷ்யனைப்போல் அம்பட்டனால் குடுமிவைத்தல் முத

வியவைகளால் அலங்கரிக்கப்பட்டவர்போல் ஆனார். சுதந்திரனும் ரஸிகனுமான ஸ்ரீகிருஷ்ணர் ஸுதாமா என்ற புஷ்பகாரனிடமிருந்து புஷ்பமாலைகளைப்பெற்று பூர்வஜன்மத்தில் வைகுண்டத்தில் பகவானுக்கு க்ஷௌரத்தையும் புஷ்பங்களைத் தொடுப்பதையும் செய்துவரும் இவ்விருவர்கள் ஸ்ரீகிருஷ்ண ஸேவார்த்தமாக வைகுண்டத்திலிருந்து பூமிக்கு வந்ததால் இவ்விருவர்களை அனுக்ரஹம் செய்தார். தன்சேவகர்களான நாபிதன் புஷ்பக்காரன் இவர்களுக்கு அவர்களின் இஷ்டபூர்த்தியையும் வைகுண்டத்தில் ஸாரூப்ய மோக்ஷத்தையும் வரனைக்கொடுத்து ஸ்ரீகிருஷ்ணன் ராஜவீதியில் போகும்போது ராஜயோக்யமான சந்தனத்தை எடுத்துக்கொண்டு மிகவும் கூனிக்கொண்டுபோகும் ஓர் ஸ்திரீயைக்கண்டார். ஸ்ரீகிருஷ்ணனால் வேண்டப்பட்ட அந்த த்ரிவக்ரை அக்ஷணமே ஸ்ரீகிருஷ்ணனுக்கு அந்த சந்தனத்தைக்கொடுத்தாள். அண்ணுவுடன் பகவான் அந்த சந்தனத்தைப்பூசிக்கொண்டார். உடனே அந்த த்ரிவக்ரையை அவளுடைய கூனை நிமிர்த்து ஒழுங்கான சரீரமுள்ளவளாகச் செய்தார். என் வீட்டிற்கு வாருமென்று ஸைரந்திரியான அந்த த்ரிவக்ரையால் ப்ரார்த்திக்கப்பட்ட பகவான் மற்றொரு சமயம் வருகிறேனென்று சொல்லி சிரித்துக்கொண்டு அவளை அனுப்பினார். பூர்ண சந்திரன்களின் சமூகத்தின் காந்தியைவிட அதிகமான காந்தியால் மனோஹரமானதும் அநந்த சூரியன்களைவிட உத்க்ருஷ்டமான உத்தம காந்தியுள்ளதுமான ஆநந்த தேகமுள்ளவனும், பீதாம்பரத்தை உடுத்தவனும், ஸுவர்ணம்போல் பிரகாசிக்கும் சந்தனம் புஷ்பம் இவைகளை தரித்தவனும் சிருங்கார ரஸத்திற்கு ஸமுத்ரம் போன்றவனும், கணக்கற்ற குணங்களுக்கு ஆசிரயனுமான பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மதுராபட்டணத்தின் ராஜவீதியில் போய்க்கொண்டிருந்தார். பிறகு எப்போதும் பரிபூர்ணமான ஸகல சக்தியுள்ள ஸ்ரீகிருஷ்ணர் கம்ஸனுடைய ஆயுதசாலைக்கு வந்து பரமசிவன் கொடுத்திருந்த எல்லோரும் பேதிக்க முடியாததான கம்ஸனுடைய தனுஸ்ஸை பலாத்காரமாய் கையில் எடுத்துத்தூக்கினார். அந்த தனுஸ்ஸை நாணேற்றி வளைத்து நடுவில் முறித்தார். எல்லா ஸுராஸுர



ஸமூகங்களால் பேதிக்கமாளாத இந்த தனுஸ்ஸு முறியவும் பதினான்கு லோகங்களுடனுள்ள பிரம்மாண்டம் உடைந்தால் எப்படியோ அப்படி பயங்கரமான சப்தம் உண்டாயிற்று. கம்ஸன் தைரியமுள்ளவனாயினும் இந்த தனுர்பங்க சப்தத்தால் தைரியமிழந்து அக்ஷணமே ஸிம்ஹாஸனத்தினின்றும் பூமியில் விழுந்தான். கம்ஸனால் ஆக்ஞாபிக்கப்பட்ட உத்க்ருஷ்டமான ஸைனியத்தை பலராமனுடன் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணன் அந்த தனுஸ்ஸின் துண்டைக்கொண்டு ஸம்ஹாரம் செய்துவிட்டு திரும்பி நந்தகோபாதிகள் இறங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு அன்றிரவு திவ்யமான பாலன்னத்தைச் சாப்பிட்டு பயமின்றி வசித்தார்.

## கம்ஸ வதம்.

மிக்க பயத்தால் படபடக்கும் ஹ்ருதய கமலமுள்ள கம்ஸனானவன் மறுநாள் காலையில், உயர்ந்த பலவகை உபமஞ்சங்களில் ஸ்திரீ ஜனங்களுடன் வீற்றிருந்த அவ்வூரார்கள் அந்த தேசத்தார்கள் இவர்களுடன் அரசர்களின் நடுவிலிருந்த மிகவும் உயர்ந்ததான மஞ்சத்தில் ஏறி உட்கார்ந்தான். உத்க்ருஷ்டமான அந்த ரங்கஸ்தலத்தின் வாசலில் பெரிய மலைக்குச் சமமானதாயுள்ளதும் மாவுத்தனுடனுள்ளதுமான குவலயா பீடமென்ற யானையை நிறுத்தி, ரங்கஸ்தலத்தில் சாணூரன் முஷ்டிகன் முதலான வீரர்களான மல்லர்களை நிறுத்தி ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைக் கொல்ல கம்ஸன் விரும்பினான். ருத்திரனின் வரத்தால் கம்ஸனுக்கு இதரர்களால் கொல்லமுடியாததும் மேலான பராக்ரமம் கொண்டதும் பொறுக்கமாளாததுமான 20 அக்ஷௌஹிணி சைனியம் இருந்தது. முன் விருகாஸுரனென்றவன் கம்ஸனுக்கு ஸுநீதனென்று தம்பியாய் பிறந்தான். கம்ஸனுக்கு பூர்வஜன்மத்தில் தம்பியாயிருந்த அஸுரர்கள் இச்சமயம் அவனுக்கு ஏழு தம்பிமார்களாய் பிறந்திருந்தனர். அந்த பாபிகள் ரங்கஸ்தலத்தை நோக்கி வந்துகொண்டிருந்த பலராமனுடன் கூடிய ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்துவிட்டு ஜனனமில்லாதவரான கிருஷ்ணனை யுத்தத்தில் ஜயிப்பதற்காக ஆயுதபாணிகளாய் கம்

ஸனுடைய இந்த ஸைனியங்களுடன் ரங்கஸ்தலத்தில் நின்றனர். உத்கிருஷ்டமான பராக்ரமம் படைத்தவரும் ஸமஸ்தமான காரியங்களைச் செய்வதிலும் மேலான சக்தியைக்கொண்டவருமான ஸ்ரீகிருஷ்ணர் ஸூரியோதயமானபின் பலராமன் கோபாலகர்கள் இவர்களுடன் கூடியவராய் பிரம்மாதி தேவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவராய் அஸுர சம்ஹாரமாக உத்தமமான ரங்கஸ்தலத்திற்கு சென்றார். வரும்பொழுது ஜகத்தின் முக்ய குருவான ஸ்ரீகிருஷ்ணர் விசாலமான ரங்கஸ்தலத்தின் வாசலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ருத்திரனின் வரத்தால் காப்பாற்றப் பட்டுவரும் பலிஷ்டமான கம்ஸனுடைய பட்டத்து யானையான குவலயாபீடமென்ற பெரிய யானையைக்கண்டார். அதன்மீது உட்கார்ந்திருந்த மகாமாத்ரனென்ற மாவுத்தனைப்பார்த்து ஹே பாபியே! சீக்கிரமே யானையை ஒதுக்கு என்று ஸ்ரீகிருஷ்ணர் சொன்னார். மகா சாமர்த்தியசாலியான ஸ்ரீகிருஷ்ணனால் அதட்டப்பட்டவனும் ருத்திரனின் வரத்தால் கர்விஷ்டனானவனும் பூமியில் எல்லோராலும் கொல்லமுடியாதவனும் பாபியுமான அந்த மகாமாத்ரன் அனந்த மாகாத்மியமுள்ள ஸ்ரீகிருஷ்ணனைக் குறிப்பிட்டு அவருக்கு எதிர் முகமாய் கொல்லமுடியாத்தான அந்த யானையை ரங்கஸ்தலத்தின் வாசலில் ஓடவிட்டான். ஸ்ரீகிருஷ்ணர் அந்த குவலயாபீடம் யானையுடன் சிறிது நேரம் விளையாடிவிட்டு அதன் துதிக்கையைப் பிடித்திழுத்து பூமியில் தள்ளி அதன் கும்பஸ்தலங்களில் இருகால்களை வைத்து அமுக்கி அதன் இரண்டு தந்தங்களைப் பிடுங்கி அந்த தந்தத்தால் அதன் மாவுத்தனான மகாமாத்ரனை அடித்தார். மகாமாத்ரன் பிராணனை விட்டான். மாவுத்தனுடன் கூடியதான கொல்லமுடியாததாயுள்ள குவலயாபீடம் யானையை ஸம்ஹாரம் செய்துவிட்டு பலராமயுக்தனாய் தோளின்மீது அந்த கஜதந்தத்தை சாய்த்துக்கொண்டு கஜசிரேஷ்டத்தின் கெட்டியான மதோதக பிந்துக்கள் தோய்ந்து சோபிதமாயுள்ள சரீரமுடையவராய் நிர்மலரான ஸ்ரீகிருஷ்ணர் ரங்கஸ்தலத்தை ப்ரவேசித்தார். பலம் வீரியம் இவைகளின் மூர்த்தியாய் ஜகத்துக்கு முக்யகுருவான ஸ்ரீகிருஷ்ணர் ரங்கஸ்தலத்தை ப்ரவேசிக்கவும் அங்குள்ள பக்தகோடிகள் பரமா



னந்தமடைந்தனர். துவேஷிகள் துக்கமடைந்தனர். ஸூரியன் உதித்தவுடன் தாமரை எவ்வாறு மலர்கிறதோ அவ்வாறு ஸ்ரீகிருஷ்ணர் வந்தவுடன் அபரோக்ஷ ஞானிகள் ஸந்தோஷமடைந்தனர். ஸூரியன் உதித்தவுடன் ஆம்பல் வாடிப்போவதுபோல் கிருஷ்ணர் வந்தவுடன் விபரீத ஞானிகள் வாடினர். ரங்கஸ்தலத்திற்குள் வந்த ஜகத்தின் ஆவாஸனான ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டு ருத்திரனின் வரத்தால் ஜகத்திற்கு அவத்யனாயிருந்த சாணூரனென்ற மல்லன் ஹே மாதவா என்று கிருஷ்ணமூர்த்தியையழைத்து இந்த வார்த்தையைக்கேள் என்று கம்ஸனை சந்தோஷப்படுத்திப் பேசினான். பிராம்மணர்கள் அரசன் தான் முக்யமான தெய்வமென்றும் அரசனுக்கு ப்ரியம் செய்தவனுக்கு மோக்ஷம் வருகிறதென்றும் சொல்லுகின்றனர். ஆதலால் கம்ஸனுக்கு ப்ரியத்தை செய்யவேண்டுமென்ற விருப்பத்தால் நான் நீ இருவர்களும் த்வந்த யுத்தத்தைச் செய்வோம். பலிஷ்டனான ராமன் முஷ்டிகனுடன் யுத்தம் செய்யட்டும். இவ்வாறு சாணூரனால் சொல்லப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் பரிகாசமாய் அப்படியே ஆகட்டுமென்று சொன்னார். அச்சமயம் சாணூரன் கிருஷ்ணனுடன் யுத்தத்திற்கு வந்தான். தேவோத்தமனான ஸ்ரீகிருஷ்ணர் ஒரு முகூர்த்தம் மல்யுத்தத்தைக்காட்டி பிறகு தன்னுடைய சத்ருவான சாணூரனின் இருகால்களை யுத்தத்தில் கைப்பற்றினார். அஸஹ்ய பலமுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் மலைபோலிருந்த வஜ்ராயுதத்தால் சோதிக்கமுடியாத சரீரமுள்ள சாணூரனை ஆகாயத்தில் தூக்கி மேலே மூன்று தடவை அவனை சுழற்றி பூமியில் அடித்து தன் காலால் தேய்த்தார். சாணூரன் தூள் தூளாய் பர்வத சிரேஷ்டம்போல் விழுந்தான். சாணூரனை ஸம்ஹாரம் செய்தவுடன் புருஷோத்தமனான ஸ்ரீகிருஷ்ணனை ஆகாயத்தில் தேவசமூகங்களும் பூமியில் மனுஷ்யர்களும் ஸ்தோத்திரம் செய்தனர். பலராமனுடைய திடமான முஷ்டிப்ரகாரத்தால் தலை சுக்கலாய்ப்போய் முஷ்டிகனென்ற மல்லன் சாணூரனைப்போல் அதே சமயம் இறந்து விழுந்தான். கூடன் தோஸலன் என்ற இரு மல்லர்கள் ஸ்ரீ கிருஷ்ணனால் பிராணனை விட்டனர். ச்சலனென்றவன் பலராமனால் உயிர் துறந்தான்

ஸுநீதன் முதலான கம்ஸனுடைய எல்லா தம்பிமார்களும்
பலராமனின் பரிகாயுதத்தால் பிராணனை விட்டனர். பாபிஷ்ட
னன கம்ஸன் தன்னைச்சேர்ந்தவர்களெல்லோரையும் கிருஷ்ண
ராமர்கள் கொன்றதைப் பார்த்து குறைவற்றதாயும் உக்ரமான
பராக்ரமமுள்ளதாயும் ருத்திரனுடைய வரப்ரஸாதத்தால் ஸம்
ரக்ஷிக்கப்பட்டதாயும் கொல்லமுடியாததாயுமுள்ள தன்னுடைய
சைனியத்தை கிருஷ்ண ராமர்களைத்துறந்தி அதிமான தண்டனை
விதியுங்களென்று ஆஞ்ஞாபித்தான். அரசனன கம்ஸனுடைய
வாக்யத்தைக்கேட்டு நாசமில்லாததான பலவகை அஸ்த்ரங்களை
தரித்த இருபது அக்ஷௌஹிணி சைனியம் நரிகளின் கும்பலின்
நடுவில் ஸிம்ஹத்தை வளைத்துக்கொண்டால் எப்படியோ அப்
படி அநந்த வீரியம் படைத்த ஸ்ரீகிருஷ்ணனை தன் நடுவில்
போட்டுக்கொண்டது. ஸ்ரீகிருஷ்ணனை அநந்த பலங்கொண்ட
ஈசுவரனென்று அறிந்தும் மகேந்திரன் ஆயுதபூர்ணமான தன்
னுடைய ரதத்தை ஸ்ரீகிருஷ்ணனின் ஸேவார்த்தமாய் ஜலபூர்ண
மான ஸமுத்திரத்திற்கு விதியால் கட்டுண்ட ஜனங்கள் அர்க்யத்
தை ஸமர்ப்பிப்பதுபோல் அனுப்பினன். ஸாரதிசிரேஷ்டனன
மாதலியால் லகான் பிடிக்கப்பட்டதான மகேந்திரன் அனுப்பித்த
தன்னுடைய ரதத்தில் ஸ்ரீகிருஷ்ணன் உட்கார்ந்து கொண்டு பல
வகை ஆயுதங்களாகிய க்ரூரமான கிரணங்களுள்ளவனுய் சூரி
யன் இருட்டை நாசம்செய்வதுபோல் இருபது அக்ஷௌஹிணி
சைனியத்தையும் ஸம்ஹாரம் செய்தார். கம்ஸன் தன்னுடைய
சைனியத்தை ஸ்ரீகிருஷ்ணர் மிச்சம் மீதியில்லாமல் ஸம்ஹாரம்
செய்தபின் கத்தி கேடயம் இவைகளை கையிலெடுத்துக்கொண்டு
கிருஷ்ணனை எதிர்த்துப்போகவேண்டுமென்று இச்சித்தான்: அத
ற்குள் தன்னை எதிர்த்துக்கொண்டுவரும் வீரனன கிருஷ்ணனை
உன்னதமான மஞ்சத்தின்மீதே கண்டான். பகவான் ஸ்ரீகிருஷ்
ணர் ராஜாளியைப்போல் வேகமுள்ளவராய் இடைவெளி காட்டா
மல் கத்தி கேடயத்துடன் சுற்றிவரும் இந்த கம்ஸனை பலாத்கார
மாய் பிடித்தார். இடதுகையால் கம்ஸனுடைய தலைமயிர்களை
இழுத்தார். அப்படியே அவனை இடதுகையால் தூக்கி வலதுகை
யால் கம்ஸனுடையதலையில் ப்ரஹாரம் செய்தார். நரோத்தமமான



ஸ்ரீகிருஷ்ணனுடைய கையில் சிக்கிய கம்ஸன் கிரீடம் கீழே
விழுந்துபோய் குண்டலமில்லாத இரு காதுகளுடனும் ஆப
ரணமிழந்த மார்புடனும் வஸ்திரம் நழுவிய இடுப்புடனும் நர
ஸிம்ஹமூர்த்தியின் கையில் சிக்கிய ஹிரண்யன்போல் மிகவும்
துக்கிக்கத்தகுந்த ரூபமுள்ளவனுய் ஆனன். அநந்த சக்தி
படைத்தவனும் தேவோத்தமனுமான ஸ்ரீகிருஷ்ணர் வேறெவ
ராலும் அதிகமான வீரியம் பலமுள்ளவனும் சதுர்முகனின்
வரத்தால் சம்ரக்ஷிக்கப்பட்டவனுமான கம்ஸனை உத்கிருஷ்ட
மான உயர்ந்த மஞ்சத்தினின்றும் இழுத்து கீழே தள்ளி தன்
இரு கால்களால் ப்ரஹாரம் செய்தார். அந்த கம்ஸனின் சரீ
ரத்திலிருந்தவரான பகவானுக்கு ப்ரியரான வாயுபகவான் ஸ்ரீ
கிருஷ்ணமூர்த்தியை ப்ரவேசம் செய்தார். அந்த கம்ஸனுடைய
சரீரத்திலிருந்த வாயுபகவானிடமிருந்து தனிப்பட்டவனன கால
நேமி என்றஅஸுரனை பிரம்மாதி தேவர்கள் பார்க்கும்போது அந
ந்தனன ஸ்ரீகிருஷ்ணன் தமஸ்ஸுக்கு இழுத்தார். குச்சிதமான
புத்தியுள்ள கம்ஸன் சகல ஜகத்திற்கும் முக்ய குருவான ஸ்ரீ
கிருஷ்ணனிடம் த்வேஷம் செய்ததால் பின்னடி கொல்லப்பட்
டவர்களான அவனைச்சேர்ந்த பூதனை முதலான எல்லா அஸுரர்
களுடனும் சேர்ந்து அந்தம்தமஸ்ஸை அடைந்தான். இப்படித்
தான் பகவத்த்வேஷிகள் அந்தம்தமஸ்ஸை அடைகின்றனர். பிரம்
மருத்திராதி தேவர்களிடம் பக்தியைக்கொண்டவனயிருப்பினும்
விதியில் சொல்லப்பட்டதான வர்ணாசிரமதர்மங்களை செய்து
கொண்டிருப்பினும் பகவானிடம் த்வேஷியான ஜீவன் நித்யம்
அதிதுக்கமுள்ள புனராவிருத்தி இல்லாததான ஸுகமற்ற அந்
தம்தமஸ்ஸை ஸகலமான வேதோக்த நிர்ணயத்தின்படி நிச்சய
மாய் அடைகிறன். எந்த ஜீவன் நிச்சயமுள்ள புத்தியுள்ளவ
னய் பகவானை பிரம்மா ருத்திரன் முதலான எல்லா ஜகத்துக்
கும் மூன்று காலத்திலேயும் சிருஷ்டி ஸ்திதி ப்ரளயம் மோக்ஷம்
இவைகளைத்தருகிறவரென்றும் ஸ்வதந்திரனென்றும் லக்ஷ்மீபதி
என்றும் அறிகிறனே விசேஷமான பக்தியுள்ள அந்த ஜீவன்
மோக்ஷத்தை அடைகிறன். ஆகவே ரமாபதியான பகவானை
அநந்தகுணபூர்ணனென்றும் தோஷரகிதனென்றும் நிச்சயித்து

உத்தம பக்தியாலேயே எல்லா காலத்திலேயும் தேவர்களெல்லாம் தாரதம்யக்ரமத்தில் பகவத்பக்தர்களென்று அறிந்து ஞான புருஷன் ஸர்வகாலத்திலேயும் பஜிக்கவேண்டும். பிரம்மா ருத்திரன் இவர்களுக்கு ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணன் தன்னுடைய சாமர்த்தியத்தால் கம்ஸனை வதம் செய்து புஷ்பவர்ஷம் செய்த பிரம்மருத்திராதி தேவர்களால் துதிக்கப்பட்டவராய் விசேஷமான சந்தோஷத்தை அடையப்பெற்றார். நிரந்தரம் ஆனந்தரூபியான ஸ்ரீகிருஷ்ணருக்கு சந்தோஷமேற்பட்டதென்று சொல்வது அல்பக்ஞ ஜனங்களின் புத்தியை அனுசரித்துச் சொன்னதாய் அறியவேண்டும். எப்போதும் உதயமடைந்திருக்கும் சூரியனுக்கு உதயமானதாய் சொல்வது எப்படியோ அப்படி சாமானிய ஜனங்களின் திருஷ்டியை அனுசரித்து இப்படிச் சொன்னதாய் அறியவேண்டும். பகவான் ஸ்ரீகிருஷ்ணன் எப்போதும் அநந்தமான ஞானானந்தத்திற்கு ஸமுத்ரஸ்வரூபனாயிருப்பவர். எப்போதும் அபிவ்யக்தமான ஸ்வரூபன். ஸமஸ்த தோஷமில்லாதவன். குணஸ்வரூபனானவன்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத்பாதாளியற்றிய ஸ்ரீமகாபாரத
தாத்பர்ய நிர்ணயத்தில் கம்ஸவத நிரூபணமாகிய
பதின்மூன்றாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து:

---

## பதினான்காவது அத்யாயம்.

ஸ்ரீகிருஷ்ணன் தன் தாய்தந்தையர்களான தேவகி வஸுதேவன் இவர்களை விலங்கிலிருந்து விடுவித்து அவர் எல்லோராலும் வணங்கப்பட்டவராயிருப்பினும் அவர்களை நமஸ்கரித்து பலராமனுடன் சேர்ந்திருந்து, தர்மத்தைக் காப்பாற்றும்பொருட்டு உக்ரஸேனராஜனிடம் ராஜ்யாதிபத்யத்தைத்தந்து உபநயனம் செய்துகொண்டு த்விஜனாய் ஆகி நந்தகோபனை அவனுடைய ஊருக்கு அனுப்பினார். ஸமாதான வாக்யங்களால் ஸமாதானத்துடன் ஸ்ரீகிருஷ்ணனால் அனுப்பப்பட்ட நந்தகோபன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் பாதாரவிந்தத்தை தன் மனதில் கல்பித்துக்கொண்டு கோபாலகர்களில் சமூகத்துடன் ஸ்ரீகிருஷ்ணனை விட்டுப்பிரியதாளாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு பிருந்தாவனத்திற்கு சென்றார்.

---

(தொடரும்.)

## விசேஷ தினங்கள்.

---

| | | |
|---|---|---|
| 22–5–32. | புதவாரம் | சிரவண உபவாஸமில்லை, விஷ்ணுபஞ்சக உபவாஸமில்லை. |
| 29–5–32. | புதவாரம் | ஏகாதசி உபவாஸம். |
| 1–6–32. | சுக்ரவாரம் | ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளின் புண்யதினம். |
| 3–6–32. | பானுவாரம் | அமாவாசை, விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| 14–6–32. | குருவாரம் | ஏகாதசி உபவாசம், சாதுர்மாஸ்யமாரம்பம். |
| 15–6–32. | சுக்ரவாரம் | த்வாதசி, மணி 7-45 க்குள் ஸாதனி, சாகவ்ரதமாரம்பம், |
| 16–6–32. | சனிவாரம் | காலை 5 நாழிகைக்குள் தக்ஷிணாயன பர்வகாலம் ஸ்நானம் தானம் முதலியவை. |
| 17–6–32. | பானுவாரம் | பௌர்ணமி, விஷ்ணுபஞ்சக உபவாஸம். |

---

# செய்தித்திரட்டு.

---

திருவனந்தபுரம் மகாராஜா ஸம்ஸ்கிருத காலேஜ் தர்க்க ப்ரதான பண்டிதரும், அரண்மனை வித்வானுமாகிய ஸ்ரீம. வே. தோளூர் ராகவேந்திராசாரியார் அவர்கள், கோயமுத்தூர், தாராபுரம், பல்லடம், ஸத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், பவானி முதலிய அநேக இடங்களில் பகவத் கீதை உபன்யாஸாதிகளைச் செய்துகொண்டு அனைவருக்கும் சந்தோஷப்படுத்திவருவது மெச்சத்தகுந்ததாயிருக்கிறதென்று கோயமுத்தூர் மகா ஜனங்கள் அறிவிப்பதாய் ஓர் நிரூபம் கிடைத்திருக்கிறது

கோயமுத்தூர் சாமையர் புது வீதியிலுள்ள ஸ்ரீகோபாலகிருஷ்ணஸ்வாமி தேவாலயத்தில் ஸ்ரீமான் H. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்களால் மேமீ 13வ முதல் ஸ்ரீநரஸிம்மஜயந்திவரையில் பிரதிதினமும் காலையில் ஹரிபஜனையும் மத்தியானம் ஸர்வமூலகிரந்த பாராயணமும் விசேஷமான பக்ஷ்யபோஜ்யங்களுடன் பிராம்மண போஜனமும் மாலையில் பண்டிதர்களைக்கொண்டு ஹரிகதாகாலக்ஷேபமும் உபன்யாஸம் முதலி

யவைகளும் இரவில் விதவிதமான அலங்காரங்களுடன் உற்சவமூர்த்திக்கு ஊர்வலமும் கடைசிநாள் ரதோற்சவமும் அடுத்தநாள் முத்துப்பல்லக்கும் அடுத்தநாள் சம்புரோக்ஷணமும் அன்று ஊஞ்சல் உற்சவமும் அச்சமயம் சௌடய்யாவால் பிடில் கச்சேரியும் நடத்திவைக்கப்பட்டதென்றும் உற்சவ முடிவில் இவர் ஆலயாதிகளில் உற்சவாதிகளும் வனபோஜனம் முதலியவை ஏன் செய்யப்படவேண்டும், அதன் முக்ய உத்தேசமென்ன வென்பதைப்பற்றி வெகு தெளிவாக ஒவ்வொரு வருடமும் உபன்யாஸம் செய்துவருவதால் பரம நாஸ்திகர்களுக்கும் ஆஸ்திக்ய புத்தி ஏற்படும்படி செய்வது மெச்சத்தகுந்ததென்றும் மணியோசை காதிலே விழக்கூடாது, ஸ்வாமிக்கு திருவிளக்கேற்றிவைப்பதை நான் பார்க்கமாட்டேன், பஞ்சபாத்ரம் எடுத்துக்கொண்டு என் வீட்டில் எந்த ப்ராம்மணனும் நுழையலாகாதென்று சொல்லக்கூடியவர்களே அதிகமாகவுள்ள இக்காலத்தில் ஸ்ரீமான் ஆசாரியாரைப்போன்ற சிலராவது இவ்வாறு ஞானபக்தி வைராக்யாதிகளை போதிக்கக்கூடிய காரியங்களை எப்போதும் செய்துவர சர்வேசுவரன் அனுக்ரஹிக்கவேண்டுமென்றும் கோயமுத்தூர் ஸ்ரீமான் T. G. கோகுல சந்திரரால் அறிவிக்கிறார்.

சென்ற மித்திரனில் அறிவித்திருந்தபடி மாத்வமித்திரன் காலண்டர்கள் வெகு தீவிரமாய் சிலவழிந்துபோய் தற்போது கிடைத்திருக்கும் அநேக ஆர்டர்களுக்கு அவைகளை அனுப்பமுடியாமலிருக்கிறதென்றும் சுமார் 100 காலண்டர்களுக்கு ஆர்டர் கிடைத்தவுடன் அவைகள் மீண்டும் இரண்டாம் முறை பதிப்பிக்கப்பட்டு அனுப்பக்கூடுமென்றும் ஆதலால் இந்ததடவையும் மாத்வ சகோதரர்கள் ஏமாறாதபடி அந்தந்த ஊரில் எவ்வளவு தேவை என்பதை நிஷ்கரிஷித்து மாத்வமித்திரன் ஆபீசுக்கு கிரயத்தொகையை சீக்கிரமே அனுப்பித்தருவது நலமென்றும் ஸ்ரீவெங்கடேஸ்வர பிரிண்டிங் ஒர்க்ஸ், புரொப்ரைட்டர் ஸ்ரீமான் V. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

சத்யமங்கலத்திற்கடுத்த ஹரியப்பன்பாளையத்தில் ஸ்ரீவியாஸராஜ மடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீமத் வித்யாவாரிதி தீர்த்தஸ்வாமிகளவர்களால் அவருடைய குரு ஸ்ரீவித்யாரத்னாகர தீர்த்தஸ்வாமிகளின் ஆராதனை மகோற்சவத்தை வைசாக பஹுள அஷ்டமி, நவமி, தசமி 27, 28 29—5—32, இந்த தேதிகளில் நடத்தப்பட்டதென்றும் சுமார் 800 ஜனங்கள் கூடியிருந்தனரென்றும் ஸ்ரீம. வே. கோயமுத்தூர் விஜயீந்திராசாரியார், தொட்டபள்ளாபுரம் வாஸுதேவாசாரியார், திருவாதி



விஜயீந்திராசாரியார், பிரபஞ்சம் ஸ்ரீனிவாசாசாரியார், மதராஸ் சாமாசாரியார் முதலிய பண்டிதர்கள் வந்திருந்தனரென்றும் பிராம்மண போஜனம் வெகு விசேஷமாய் நடத்தப்பட்டதென்றும் பதர்பேணி, குஞ்சாலாடு சுருள்போளி இந்த பக்ஷணங்கள் முறையே மூன்று நாட்கள் ஏராளமாய் வழங்கப்பட்டதென்றும் பிரதிதினம் இரவு தர்பார் காலத்தில் ஸ்ரீம. வே. திருவாதி விஜயீந்திராசாரியாரின் குமாரர் சுமார் 11 வயதுள்ள நாராயணாசாரியாரால் தர்க்க சாஸ்திரத்தில் நியாயபோதினி வாயுலக்ஷணம் அவியாப்திலக்ஷணம் முதலியவைகளில் வாக்யார்த்த விசாரம் செய்யப்பட்டு வந்ததென்றும் சுமார் 16 வயதுள்ள அவருடைய மாப்பிள்ளை பிரபஞ்சம் வெங்கடேசாசாரியாரால் பிரதிதினம் நியாயபோதினியில் ஸ்மிருதி லக்ஷணம் மனோலக்ஷணம்இவைகளில் வாக்யார்த்த விசாரம் செய்யப்பட்டுவந்ததுடன் மகா சமாராதனை நாளாகிய நவமியன்று ஸம்ஸ்கிருதத்தில் மகாசமாராதனையை சிலாகித்து வெகு அழகாய் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் கடைசி நாள் ஸ்ரீமான் சௌடய்யாவால் பிடில் கச்சேரி நடத்தப்பட்டதென்றும் ரூ 5, 7, 10, 15 வித்வத் ஸம்பாவனை செய்யப்பட்டதென்றும் ஸ்ரீஸ்ரீஸ்வாமிகளுக்கு ஸங்கீதத்தில் அதிகமான அபிருசி இருந்துவருவதும் தாஸர் பதங்களைக்கேட்க அவர் அதிகமான அவாகொண்டிருப்பதும் குறிப்பிடத்தகுந்ததென்றும் நமது நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் பாரதகண்டத்தின் உத்தரபாகத்திலுள்ள கயா க்ஷேத்திரத்தில் அவருடைய சிஷ்யர்களான கயாவாலிகளின் ப்ரார்த்தனையின்பேரில் சாதுர்மாஸ்யஸங்கல்பத்தை நடத்துவதாய் தெரியவருகிறது. ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடாதிபதியவர்கள் மந்த்ராலயத்திலும் ஸ்ரீவியாஸராஜமடம் ஸ்வாமிகள் ஈரோடுக்கடுத்த பவானியிலும் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தில் அமருவதாய் நமக்கு செய்தி எட்டியிருக்கிறது.

கோள்ளேகாலத்திலிருந்து ஸ்ரீமான் N. தேவாஜிராவை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த ஹரிதாஸா பத்திரிகை இப்பால் சிலமாத காலமாக வெளிவராமல் நின்றிருக்கிறதென்றும் அதன் ஏஜண்டு ஸ்ரீமான் M. ராமராவ் எழுதிய கடிதத்திற்கும் பதில் கிடைக்காமல் யாதொரு தகவலுமெட்டாமலிருந்துவருகிறதென்றும் அதைப்பற்றி தனக்கு பலர் எழுதிவருவதால் அவர்களுக்கு தனியே பதிலளிப்பது அஸாத்யமாயிருப்பதைக்கொண்டு இதன் மூலமாய் மேற்கண்ட விஷயத்தை அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் ஸ்ரீமான் M. ராமராவ் அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கம் புது அக்கிரஹாரத்தில் ஸ்ரீஸ்ரீ விசுவப்ரிய மத்வநாதவடயரின் பிருந்தாவனமுள்ள கிருகத்தில் மாத்வர்கள் ஓர் ஸபைகூடி பிரதிதின மாலையில் ஸ்ரீம. வே. யதுநாதாசாரியாரவர்களைக்கொண்டு மத்வவிஜயமும் பிரதி சுலோகம் சிரவணம் செய்யப்படுவதுடன் பாலர்களுக்கு மந்த்ர ஸ்தோத்திரங்களும் கற்றுக்கொடுக்கப் பட்டுவருகிறதென்றும் 26—5—32 குருவாரத்தன்று கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியரால் இச்சபையின் ஆதரவில் மாத்வமதத்தின் பெருமையைப் பற்றி ருசிகரமாயும் தெளிவாயும் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் அச்சமயம் கும்பகோணம் ஸ்ரீமான் கிருஷ்ணராவ் தாஸர் அவர்கள் வெகு உருக்கமாய் அநேக தாஸர்பதங்களை பாடினரென்றும் கூட்டம் பலமாககூடி ஸ்ரீரங்கத்திலுள்ள அநேக பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனரென்றும் ஸ்ரீமான் சர்நூல் C விஜயீந்திரராவ் அறிவிக்கிறார்.

# கடிதங்கள்.

---

## காபி பானம்.

---

வயிற்றிலொன்றுமில்லாமல் பட்டினியாயிருந்துதான் வைதிககர்மாக்களைச் செய்யவேண்டுமென்பதற்கு அடியிற்கண்டவைகள் பிரமாணமாய்ச்சொல்லலாம் "அபுக்த்வா ப்ராதராஹாரம்" காலையில் ஆகாரத்தை உட்கொள்ளாமல் என்று விரத நியமங்களைச்சொல்லும் ப்ரகரணத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. [நிர்ணய ஸிந்து 17-வது பக்கம் பார்க்க.] சிரார்த்த ப்ரகரணத்தில் கர்த்தாவுக்கும் போக்தாவுக்கும் புனர்போஜனம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. "புக்தா ஹாரோ தவா புஞ்க்தே ஸுக்ருதம் தஸ்யநச்யதி! சிராத்தகர்த்தா ச போக்தா ச புனர்புக்திம் ச வர்ஜயேத்" என்று அநேக வசனங்களிருக்கின்றன. "புனர்போஜீச வாயஸ:" அவன் காக்கையாக பிறப்பானென்றும் பாபபலனும் சொல்லப்பட்டிருக்கிறது. சிரார்த்த தினத்தன்று வீட்டில் குழந்தைகளுக்குகூட காலையில் சாப்பாடு தரலாகாதென்று "சிரார்த்தேஹ்னி போஜயேத் வாஸ்தௌ ந பாலானபியத்னத:" என்ற வசனத்தால் ஆசுவலாயனர் தடுத்திருக்கிறார். இவ்வளவு நிர்பந்தமிருக்க



காபியைக் குடித்து ஏன் வைதிககர்மாக்களை செய்யலாகாதென்றால் என்ன சொல்லுவது. இது நாஸ்திக ஆசாரமென்றே சொல்லவேண்டும். வீட்டில் குழந்தைகளுக்குக்கூட ஆகாரம் போடலாகாதென்று தடுத்த தர்ம சாஸ்திரகாரர் கர்தா போக்தா இருவர்களும் வயிறார குடிப்பதை எப்படி அனுமதிப்பார். அப்படி அவர்கள் செய்வார்களேயானால் அதற்கு பரிகாரம் யமகிங்கராளுடைய ஆயுதத்தால்தான் ஏற்படவேண்டும். நாம் தினப்படி செய்யவேண்டிய நித்ய கர்மாக்களிலும்கூட எத்தனையோ தேவகாரியங்கள் பித்ரு காரியங்கள் கலந்திருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் என்னவழி! உதாஹரணம், ஸ்நானம் செய்யும்போது தேவரிஷி பித்ருதர்பணம், பித்ருக்களுக்கு சேரும் சிகோதகதானம், பித்ருக்களுக்கு சேரும் வஸ்திரநிஷ்பீடனம், பிரம்மயக்ஞத்தில் தேவரிஷி பித்ருதர்பணம். பித்ருதர்ப்பணம், பலிஹரணத்தில் ஸ்வதாபித்ருப்யஹ, என்ற பித்ருயக்ஞம் இவைகளெல்லாம் கலந்திருக்கின்றன. இவைகளெல்லாம் அவசியமான நித்ய கர்மாக்களானபடியால் சுருதிஸ்மிருதிகளறிந்த எத்தனையோ பெரியோர்கள் காபிபானமாகிய பிசாசின் கையில் அகப்படாமலேயே நாராயணவர்மம்போன்ற கவசங்களை அணிந்து ஆத்ம ஸம்ரக்ஷணை செய்துகொண்டு பதிறையிரக்கணக்காய் இன்னமும் இருந்து வருகின்றனர். ஆகையால் காலையில் நித்யகர்மங்களை சரியாய் செய்து முடிக்க காபிபானத்தை வர்ஜித்தல்தான் சாஸ்திர ஸம்மதம்.

கா. பே. ஹயக்ரீவ தீக்ஷிதர்.

---

## கோயமுத்தூர் வாஸுதேவராயரின் மாத்வா பப்ளிக் லைப்ரெரி.

சுமார் ஒரு வருடத்திற்கு முன் காலஞ்சென்ற ரிடையர்ட் டிப்டி கலெக்டர் ஸ்ரீமான் வாஸுதேவராவ் மாத்வர்கள் இலவசமாய் ஸுலபமாக மதக்ரந்தங்களை படித்தறிய ஓர் பப்ளிக் லைப்ரெரி ஏற்படுத்தியிருக்கிறார். அவர் சுமார் 3,200 ரூபாய் மூலதனமாய் வைத்திருப்பதாய் தெரியவருகிறது தற்போது அதில் சுமார் 1200 ரூபாய் மதிப்புள்ள புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீமத்வாசாரியாரின் ஸர்வமூல கிரந்தங்கள் டீகாடிப்பணி கிரந்தங்கள், காவியநாடகாதிகள், புராண இதிஹாஸாதிகள், மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புள்ள எமது மதகிரந்தங்கள் இருந்து வருகின்றன. இஃது சலவன் வீதியிலுள்ள கோவாபரேடிவ் ஸ்டோர் வெளிரூமில் தற்போது இருக்கிறது. காலை மணி 7 முதல் 10 வரையிலும் மாலை மணி 3 முதல் 6 வரையிலும் திறந்து வைக்கப்பட்டு லைப்ரேரியனும் புஸ்தகங்களை எடுத்துக்கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீமலே பண்டிட் தெக்கலூர் கிருஷ்ணாசாரியார் அவர்கள் ஸ்ரீ மத்வமத கிரந்தங்களை பாடம் சொல்ல அங்கு சித்தமாக இருந்துவருகிறார். இவ்வாறு ஸ்ரீமத்வ மதப் பிரசாரத்திற்கு ஏற்பட்ட இந்த தர்மம் அவர்கள் செய்துள்ள பல புண்ய காரியங்களில் அதி உத்தமமானதேயாகும்.

T. G. கோகுலசந்திர ராவ்,
கோயமுத்தூர்.

---

## ஐயவினா.

1. இக்கலியுகத்தில் மோக்ஷஸாதன விஷயத்தில் ஸ்திரீகளுக்கு குருத்வமும் புருஷர்களுக்கு சிஷ்யத்வமும் ஏற்படுவதாயிருந்தால் சாஸ்திர ஸம்மதமாகுமா?

2. ஸ்ரீ ஸ்வாமிகளின் பிருந்தாவனத்திற்கு ஹஸ்தோதகம் கொடுக்கும் வழக்கமுள்ள வீட்டில் சிரார்த்தம் நேர்ந்த நாளில் சிராத்தபோக்தாக்களுடன் ஸமபந்தியில் ஹஸ்தோதக இலையையும் போட்டு பராமரி ஹஸ்தோதகம் கொடுப்பதால் ஏதேனும் தோஷங்கள் உண்டா? இந்த மேற்கண்ட சந்தேகங்களுக்கு தாங்களாவது அல்லது இதர வித்வான்களாவது மத்வசம்பிரதாயத்தை ஒட்டிய நிச்சயத்தை இப்பத்திரிகையின் வாயிலாய் அறிவிக்க ப்ரார்த்திக்கிறேன்.

R. ரகூத்தம ராவ்,
ஜயவிலாஸ், பண்ருட்டி.

3—6—32.

208694


## மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வ மதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாரராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! பாதிவிலை !!

### சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

### அபூர்வ நாடகங்கள்.

| | |
|---|---|
| துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கசுதாசாரியார் ஆசிரியர்) | 0—6—0 |
| உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர் | 0—4—0 |
| சக்குபாய் ஷை | 0—4—0 |

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

### கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பெரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ 4—8—0

ஆண்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ 4—12—

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்ப

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. In

# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 | தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின்விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸர் பவ்டர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கரிஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல்
பற்பொடி [தைலம்
ஊதுவத்திகள்

ச ந் த னா தி த் தை தல ம்

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்

கேட்லாக்குக்கு எழுதுங்கள்



Printed at Sri Venkateswar Printing Works and [illegible] by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.